Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx. Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

எப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Violag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836


பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 755-
Fax:021 222 7310

e.mail:thirumurugan5@lycosmail.com

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 17 (30.11.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:61

# திருகோணமலையில் பதற்றமும்; கலவரம் வெடிக்கும் அபாயமும்!

## குண்டுவெடிப்பில் ஒருவர் பலி – ஊரடங்கு அமுல்





(திருகோணமலையிலிருந்து சசிகுமார், கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட அதேவேளை, அங்கு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்தனர் இதையடுத்து நேற்று நண்பகல் முதல் அங்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவை நடத்திய பூரண ஹர்த்தால் காரணமாக திருகோணமலை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியினரும் பொலிஸாருமே திருமலை வன்முறைக்கு காரணம்!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் தொடர்புபட்டிருக்கவில்லை என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான ஒஸ்கார் சொல்லிஸ் இது குறித்துத் தகவல் வெளியிடுகையில் யெனத் தெரியவருகிறது. திருகோணமலைச் சம்பவங்களுக்கு சிங்களக் கட்சி ஒன்றின் உறுப்பினர்களும், பொலிஸாருமே பொறுப்பாக இருந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் விடுத்துள்ள அறிக்கையில் -

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற சம்பவங்

# திருமலை குழப்ப நிலை நியாயபூர்வமானதாம்!

## ஜே.வி.பி. கூறுகிறது

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட மக்கள் மத்தியில், ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமை நியாயமானது என்று ஜே.வி.பி அறிக்கை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது. இந்த விடயம் குறித்து புத்திக் கூர்மையுடன் கவனம் செலுத்த வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தகிரி - கொட்டேகொட திருமலைக்கு விரைவு!

(கொழும்பு)

# போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் தொடர்புபட்டிருக்கவில்லை என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான ஒஸ்கார் சொல்லிஸ் இது குறித்துத் தகவல் வெளியிடுகையில் -

திருகோணமலையில் இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் தவிர்க்கப்படவேண்டும். இந்த வன்முறைகள் தொடர்பாக கண்காணிப்புக்குழு தீவிரமாக விசாரணையை மேற்கொண்டது.

இந்த விசாரணைகளின்மூலம் விடுதலைப் புலிகளுக்கும் இதற்கும் எந்தவித தொடர்பும் இல்லையெனத் தெரியவருகிறது. திருகோணமலைச் சம்பவங்களுக்கு சிங்களக் கட்சி ஒன்றின் உறுப்பினர்களும், பொலிஸாருமே பொறுப்பாக இருந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் விடுத்துள்ள அறிக்கையில் -

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. கடந்த சில தினங்களாக படையினரதும் ஜே.வி.பியினரினதும் நடவடிக்கைகள் இவ்வாறன சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

அவர்கள்தான் நல்ல சூழ் நிலையை உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (01)

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட மக்கள் மத்தியில், ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமை நியாயமானது என்று ஜே.வி.பி அறிக்கை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது. இந்த விடயம் குறித்து புத்திக் கூர்மையுடன் கவனம் செலுத்த வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# சந்தகிரி - கொட்டேகொட திருமலைக்கு விரைவு!

கொழும்பு)

திருகோணமலையில் உருவாகியுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு உத்தரவிட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக கூட்டுப்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோரை திருகோணமலைக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருப்பி அனுப்பவேண்டாம் எனக் கோரி

# அவுஸ்ரேலியாவில் உண்ணாவிரதம் இருக்கும் இலங்கையர் இருவரின் நிலை கவலைக்கிடம்!

(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் பக்ஸ்டர் அகதிகள் தடுப்புமுகாமில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளில் இருவரின் உடல் நிலை மோசமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மை மீண்டும் இலங்கைக்கு அனுப்பவேண்டாம் எனக் கோரியே அகதிகள் தடுப்பு முகாமிலுள்ள 11 இலங்கை அகதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் இருவரின் நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாகவும் - இவர்கள் மிக விரைவில் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படலாம் என்று அகதிகளுக்கான அவுஸ்ரேலிய அமைப்பின் பேச்சாளரான மிராரொப் லெஸ்கி தெரிவித்தார்.

இவர்களின் உடல்கள் மிகவும் சோர்வுற்ற நிலையில் வலுவிழந்து காணப்படுவதாகவும் -

போசாக்கு படிப்படியாகக் குறைந்து செல்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தெற்கு அவுஸ்ரேலியாவில் இந்த பக்ஸ்டர் அகதிகள் தடுப்பு முகாம் இருப்பது குறிப்பிடத்தககது.

# நியூஸிலாந்து செல்லமுயன்ற 18 பேர் கற்பிட்டியில் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மீன்பிடிப் படகு மூலம் நியூஸிலாந்து நாட்டுக்குச் செல்ல முயன்ற 18 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

புத்தளம் - கற்பிட்டியிலிருந்து கடல்வழியாக இவர்கள் நியூஸிலாந்துக்குப் புறப்படவிருந்தமை தொடர்பான தகவல் பொலிஸாருக்குக் கிடைத்ததையடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது 4 தமிழர்கள் உட்பட 18 இலங்கையர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், இவர்கள் பயணம் செய்யவிருந்த படகும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

நியூஸிலாந்து செல்வதற்காக காத்திருந்தபோது கைது செய்யப்பட்ட 18 பேருடன் தங்கியிருந்ததாகக் கூறப்படும் மேலும் 78 பேர் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து இவர்கள் ஒவ்வொருவரும் வெளிநாட்டுப் பயணத்துக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா முதல் (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# பட்டப்படிப்புகள் கற்கைநெறி தொடர்பான விளக்கக் கூட்டம்!

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட இளைஞர் - யுவதிகளுக்கு பட்டப் படிப்புகள் கற்கைநெறி தொடர்பான விளக்கக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன கிழமை 2.30 மணிக்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தின் ஊடாக க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் டிப்ளோமா, பட்டம், பட்டப்பின்பட்டம், கலாநிதி பற்றிய உயர் கற்கை நெறிகளை எவ்வாறு மேற்கொள்ளலாமென இந்தக் கூட்டத்தில் விரிவாக விளக்கப்படவுள்ளது.

படித்த இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பை பெறும் நோக்கிலும் சகலரும் உயர்கற்கை நெறிகளைப் பயிலவேண்டும் என்பதற்காகவுமே இந்த விளக்கக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் திறந்த பல்கலைக் கழகத்தின் பிராந்திய இயக்குநர் ச.சு. ஞானேந்திரன் கருத்துரை வழங்கவுள்ளதாக பிரதேச சபையினர் தெரிவித்தனர். (91)

## மருதங்கேணி கிராம வைத்தியசாலையில்

# ஊழியர் பற்றாக்குறையால் நோயாளர் பெரும் சிரமம்!

மருதங்கேணி கிராமவைத்தியசாலையில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இந்த வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிசசை பெறவேண்டிய நோயாளர்கள், தூர இடங்களிலுள்ள வேறு வைத்திய சாலைகளுக்கு இடமாற்றப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக நோயாளர்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - இந்த வைத்திய சாலையில் சேவையாற்றிவரும் வைத்திய அதிகாரியின் பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் முடிவடையவுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையிலேயே இவர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (122)

# மிருக வைத்தியர்களின் வெற்றிடத்தை நிரப்ப கால்நடை அமைச்சு நடவடிக்கை!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணப்படும் மிருகவைத்திய வெற்றிடங்கள் மிகவிரைவில் நிரப்பப்படவுள்ளதாக கமத்தொழில் கால்நடைகள், காணி நீர்ப்பாசன அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 49 மிருக வைத்தியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதால் இந்த மாகாணத்தில் உள்ள மிருக வைத்திய நிலையங்களை இயக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் பற்றாக் குறை உட்பட பல குறைபாடுகள் நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


DF ODW

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்

நோர்வே மாணவர்களினதும் அபிவிருத்தி நிறுவனத்தினதும் நிதியுதவியுடன் செயற்படுத்தும்!

க.பொ.த. (சா/த) 2004 டிசெம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான

கருத்தரங்கு

நடைபெறும் இடங்கள்:

ODW செயற்திட்ட வளநிலையம் :- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
ODW செயற்திட்ட வளநிலையம் :- பாலிநகர் - மல்லாவி
ODW செயற்திட்ட வளநிலையம் :- அறிவியல் நகர்

| இல. | பாடம் | காலம் | நேரம் |
|---|---|---|---|
| 01 | விஞ்ஞானம் | 02.12.2004 | 8.30 - 3.00 |
| 02 | ஆங்கிலம் | 03.12.2004 | 8.30 - 3.00 |
| 03 | கணிதம் | 04.12.2004 | 8.30 - 3.00 |

NOTE:

கருத்தரங்கு முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட மாதிரி வினாத்தாளாகக் காணப்படும்.

பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட் சார்த்திகளும் இந்த இலவச கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம்.

கருத்தரங்கில் பரீட்சை வழிகாட்டல் குறிப்புக்களும் வழங்கப்படும்.

விளம்பர அனுசரணை:

நமது ஈழநாடு


# பிரதேச சபை உப அலுவலகம் செம்பியன்பற்றில் திறப்பு!

(ஆழியவளை)

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சி. பசுபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா நாடாவை வெட்டி கட்டடதைத் திறந்து வைத்தார்.

போரால் சேதமடைந்த இந்தக் கட்டடம் மூன்று இலட்சம் ரூபா செலவில் மீளப் புனரமைக்கப்பட்டது.(122)

# மதிய உணவு வழங்கும் பாடசாலை அதிபர்களுக்கு!

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் பாடசாலைகளின் அதிபர்கள் தமக்கு மதிய உணவுப் பொருட்கள் தேவைப்படின் உடனடியாக தென்மராட்சி கல்வி வலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கல்வி வலயப் பணிப்பாளர் தெரிவித்தார். (29)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு இரண்டாம் கட்டச் செயலமர்வு!

(சாவகச்சேரி)

ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கான ஆரம்பக் கல்வி 2 ஆம் கட்ட செயலமர்வு எதிர்வரும் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

முதலாம் கட்டச் செயலமர்வில் பங்குபற்றியவர்களும் இந்த இரு நாள் செயலமர்விலும் பங்குபற்றி பயிற்சியை நிறைவு செய்யும்படியும், பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார். (29)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு!

(சுதுமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், சிறுவர் பாதுகாப்பு, முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை 3 மணிக்கு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ஜோ.ஜோன்சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்களில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு பிரதேச இணைப்பாளர் சா.சந்திரவதனி அறிவித்துள்ளார். (91)

# சமூகசேவை அலுவலருக்கு திருமலையில் கருத்தரங்கு!

சமூகசேவை அலுவலர்களுக்கான கருத்தரங்கொன்று எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளதாக வட-கிழக்கு மாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் என். ஆர்.ரஞ்சினி தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்குக்கு யாழ்குடா நாட்டிலிருந்து சமூகசேவை அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(25)


நிறஞ்சனாஸ் சங்கானை

30.11.2004 முதல்

சூர்யா (2 வேடம்), ஜோதிகா நடித்த

பேரழகன் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

VANHELSING (ரகுலபடம்)

(சி-2723)



யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும்

ஒரேதின வெளியீடான

அஜித் இரு வேடங்களில்

பூஜா நடித்த



அட்டகாசம் (ரீல்ஸ்)

பு.நே. 10.30, 2.30, 6.30

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்




யாழ்ப்பாணம் வண்ணை சிவப்பிரகாசம் வீதியில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் அதிகமாகவுள்ள பகுதியில் - தனியார் வளவொன்றில் கழிவுகள் கொட்டப்பட்டு நீண்டகாலமாக அகற்றப்படாமையால் வீதியில் பயணிப்போரும் சுற்றாடலில் வசிப்போரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். வீதியோர வளவில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளையே படத்தில் காண்கின்றீர்கள். (113)

# குடி தண்ணீர் பாதுகாத்தல் குறித்து யாழ். செயலகத்தில் இன்று மாநாடு!

(யாழ்ப்பாணம்)

குடிதண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் குளங்களைப் பாதுகாத்தல் தொடர்பான கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

நோராட் நிறுவனம் நடத்தும் இந்தக் கூட்டத்திற்கு யாழ். மேலதிக அரச அதிபர் தலைமை வகிப்பார்.

மேற்படி கூட்டத்தில் குடிதண்ணீர் சுத்திகரிப்புக்குத் தேவையான பொதுத் திட்டங்கள், வழிவகைகள் போன்ற அம்சங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன.

அத்துடன் குளங்களின் அவசியம் குறித்தும் அவற்றைப் பேணுவதன் அவசியம் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளன. இந்தக் கூட்டத்தில் நீர்வளத் திணைகள அதிகாரிகளும் கலந்துகொள்கின்றனர்.

# ஆயிரம் சிறந்த ஆசிரியர்கள் தேசிய ரீதியில் கௌரவிப்பு!

## ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நடவடிக்கை

நாட்டில் உள்ள ஒவ்வொரு வலயக்கல்வி அலுவலகங்களில் இருந்தும் 15 சிறந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் விசேட பணிப்புரைக்கு அமைய கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதன்பிரகாரம் அரசாங்கப் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களில் இருந்து சிறந்த ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு தேசிய ரீதியில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள் - அதிபர்களின் சிபார்சுக்கு அமைய தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கல்வி வலயத்தில் இருந்தும் 15 பேர் வீதமாக மாகாண மட்டத்தில் 1000 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

## க.பொ.த சாதாரண தர

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வடமராட்சி கிழக்கில் இலவச கருத்தரங்கு!

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவச கருத்தரங்குகளை வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்புகள் ஒன்றியம் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயம், ஆழியவளை சி.சி. த.க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் கல்வி பயிலும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை இக்கருத்தரங்குகளில் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்புகள் ஒன்றியம் அறிவித்துள்ளது. (122)

# சமுர்த்தி உத்தியோகத்தருக்கான மூன்று நாள் விவசாயப் பயிற்சி

திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் இன்றும் நாளையும் நாளைமறுதினமும் மிளகாய்ச் செய்கை, கிருமி நாசினிகளின் தாக்கம் ஆகியன குறித்த விவசாயப் பயிற்சிநெறி பருத்தித்துறை சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான இந்தப் பயிற்சிக்கு நிகொட் நிறுவனம் அனுசரணை வழங்கி வருகிறது. இவர்களுக்கான போக்குவரத்து வசதி, இடவசதி, உணவு ஆகியன இலவசமாக வழங்கப்படவுள்ளன. (15)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

3 வது வெற்றிவாரம் (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)

தனுஷ், பிரியா நடித்த

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30 (பு.நே)

தினசரி இரவு 9.00 (பு.நே) 30.11.2004 முதல்

RAMBO - 3 தாக்குதல் நிறைந்த படம்

(சி-3319)



சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்

ஒரேதின வெளியீடான

P.B.சௌத்திரியின்

சரத்குமார், நமீதா, வடிவேல்

நடித்த



சத்ரபதி

கா.நே. 11.00, 2.00, 7.00, 10.00

# ஜேர்மனியில் சிறப்பாக நடைபெற்ற தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள்!







ஜேர்மனியில் மாவீரர் நாள் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கடந்த சனிக்கிழமை மதியம் 1.00 மணிக்கு எழுச்சி நிகழ்வுகள் அனைத்தும் ஆரம்பமாகின.

மதியம் 1.00 மணிக்கு தமிழீழத்தின் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. 27.12.1987 அன்று கோப்பாயில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை மதன் என்றழைக்கப்படும் கந்தசாமி சிவாணந்தனினதும், 11.05.1996 அன்று ஆனையிறவு முகாம் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் அப்பன் என்றழைக்கப்படும் கந்தசாமி சிவநேசனினதும் தந்தையாராகிய ஆசைப்பிள்ளை கந்தசாமி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து தேசியத் தலைவர் ஆற்றிய மாவீரர்நாள் சிறப்புரை தமிழ் ஒளியூடாக நேரடியாக மாவீரர்நாள் மண்டபத்தில் ஒளிபரப்பப்பட்டது.

பொது ஈகச்சுடர் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லத்தில் ஏற்றப்பட்டது. 05.04.98 அன்று ஆனைக்கோட்டையில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் கமலினி (மாங்குயில்) என்றழைக்கப்படும் ஆனந்தவிநாயகம் றஜிதாவின் தந்தையாராகிய நாகலிங்கம் ஆனந்தவிநாயகம் ஈகச்சுடரை ஏற்றினார்.

தாயகத்தில் இருந்து வருகைதந்திருந்த லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் களமுனை ஆசிரியர் குழுப் பொறுப்பாளர் நிலவன் சிறப்புரை ஆற்றினர்.

இந்த எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் அனைவரும் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு சுடர் வணக்கம், மலர் வணக்கம் செய்தனர். மலர் வணக்கத்திற்கு தமிழீழத்தின் தேசியப்பூவான கார்த்திகைப்பூ அனைவருக்கும் வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிக் கிளையால் தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையை நினைவுபடுத்தும் வெளியீடுகளாக தேசியத் தலைவரின் படம் பொறித்த பட்டயமும், ஜேர்மனிக் கிளையின் கலை பண்பாட்டுக் கழகத்தின் உருவாக்கத்தில் சுயத்தை வென்றவன் என்ற இறுவட்டும், தாயகத்து வெயீடுகளான 2 ஆம் லெப். மாலதி படையணியின் 'விழுதுமாகி. வேருமாகி' எனும் நூல், கடற்புலிகள் பாகம் 6,7,8, 'அலைபாடும் பரணி' எனும் இறுவட்டுக்கள், ஈழத்து எழுத்தாளர் கவிஞர் நாவண்ணன் எழுதிய தீபங்கள் எரிகின்றன எனும் நூலும் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

எழுச்சி கானங்கள், எழுச்சி நடனங்கள், 'யுத்தகாண்டம்' நாட்டிய நாடகம், மேலைத் தேய கலைஞர்கள் வழங்கிய விடுதலைக் கானங்களின் இசை, இசையும் கதையும், சிறுவர் உரை, 'சுயத்தை வென்றவன்' நாட்டிய நாடகம், 'அணை' தாள இசைலயம், 'எங்கள் தேசம்' நாடகம், தமிழிசை ஆகிய எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

ஜேர்மனியின் பல பாகங்களில் இருந்தும் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தாயகத்திற்கு தம் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தினர்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வுகள் இரவு 9.00 மணிக்கு தேசியக் கொடியை இறக்கப்பட்டபோது திரண்டிருந்த மக்களனை வரும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று முழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

## ஆளும் கட்சி வரவு - செலவு திட்டத்தை அமைச்சரொருவர் கடுமையாக விமர்சனம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை முக்கிய அமைச்சரொருவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மலையக அபிவிருத்தி மற்றும் தபால் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சரான டி.எம்.ஜயரத்ன நிதி ஒதுக்கீடுகளில் பாகுபாடு காட்டப் பட்டுள்ளதாக அந்த விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கிராமிய அபிவிருத்திகளுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், அது முழுமையாக ஏற்கக்கூடியதல்ல.

8 மாவட்டங்களை உள்ளடக் கிய மலையக அபிவிருத்திக்கு 20 மில்லியன் ரூபா மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது போதுமானதா என வினா எழுப்பிய அவர், ஓரிரு மாவட்டங்களை மட்டும் உள்ளடக்கிய அமைச்சுக்களுக்கு இதனைவிட கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பாகுபாட்டுக்கு எதிராக அமைச்சரவையிலும், அதற்கு வெளி யேயும் தான் குரல் எழுப்ப பின்னிற்கப்போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

## நாடாளுமன்றத்தினுள் 'செல்போன்கள்' தடை!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையடக்கத் தொலைபேசிகளை சபைக்குள் எடுத்து வருவதற்கு இன்றுமுதல் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்தார்.

இந்தத் தடை உத்தரவைக் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த ஒழுங்குசெய்யப்படும் என்றும் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட் டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்துக்கு நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பதிலளித்து உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு அறிவித்தார்.

அமைச்சர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, சபையினுள் கையடக்கத் தொலைபேசியொன்றின் அழைப்புச் சத்தம் நீண்ட நேரமாக ஒலித்துக்கொண்டிருந்தது.

இதையடுத்து, சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்தார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த விடயங்கள் பேசப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## 14 அகதிகள் மன்னார் திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 14 இலங்கை அகதிகள் தாயகம் திரும்பும் போது இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது, அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இவர்களில் ஒருவர் ஹெரோயின் கடத்தி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரை நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## சுவிஸில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளிலிருந்து...










## நோர்வேயில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளிலிருந்து...








# தென்னாபிரிக்காவுடனான 2 ஆவது டெஸ்ட்

# இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 129!



(கொல்கத்தா)

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையேயான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.


முதலில் விளையாடிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 227 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கலிஸ் 103 ஓட்டங்களுடனும், புருன் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் புருன் 15 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் கார்த்திக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து பொலக், கலிஸுடன் ஜோடி சேர்ந்தார்.

மிகவும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கலிஸின் விக்கெட்டை கங்கூலி கைப்பற்றினார். அப்போது தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கை 261 ஆக இருந்தது. கலிஸ் 259 பந்துகளில் 12 பவுண்டரியுடன் 121 ஓட்டங் கள் எடுத்தார். இவரது சிறப்பான ஆட்டத் தால் தென்னாபிரிக்காவால் மிதமான ஓட்ட எண்ணிக்கையை எடுக்க முடிந்தது.

மதிய உணவு இடைவேளைக்கு முன்பு பொலக், கும்ளேயின் பந்து வீச்சில் ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மதிய உணவு இடைவேளையின் போது தென்னாபிரிக்கா 8 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஒன்ரொங் 16 ஓட்டங்களுடனும், டிசோலெகிலே 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்த




னர். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு எஞ்சிய இரு விக்கெட்டையும் ஹர்பஜன்சிங் எடுத்தார்.


தென்னாபிரிக்கா 121.3 ஓவரில் 305 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சகீர்கான், இர்பான் பதான் ஆகியோர் தலா 3 விக்கெட்டும், ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டும், கும்ளே, கங்கூலி தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் இந்திய அணி முதல் இனிங்ஸை விளையாடியது. ஷேவாக்கும், காம்பீரும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

ஓட்ட எண்ணிக்கை 17 ஆக இருந்த போது காம்பீர் 7 ஓட்டங்களில் பொலக் பந்தில் ஆட்டமிழந்தார். ஷேவாக்குடன் ராவிட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாகவும் நேர்த்தியாகவும் தென்னாபிரிக்க பந்து வீச்சை எதிர்கொண்டது.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷேவாக் 82 ஓட்டங்களுடனும், ராவிட் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## நான்காவது ஆண்டாகவும் ஹைடன் 1000 ஓட்டங்கள்



(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் மத்தியூ ஹைடன் தொடர்ந்து 4 ஆண்டுகளாக ஆண்டுதோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இத்தகைய சாதனை புரிந்துள்ள முதலாவது வீரர் இவராவார்.

அடிலெய்டில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் 10 ஓட்டங்கள் பெற்றபோது இந்தச் சாதனையை அவர் நிகழ்த்தினார். நேற்று அவர் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

12 மாதங்களுக்கு முன் 1000 ஓட்டங்களைச் சேர்த்து தொடர்ந்து 3 ஆண்டுகளாக ஆண்டுதோறும் ஆயிரம் ஓட்டங்கள் குவித்த முதல் வீரர் என்னும் பெருமையை ஹைடன் பெற்றார். இப்போது 4 ஆவது ஆண்டாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

முன்னதாக 2001 இல் 1391 ஓட்டங்களும் 2002 இல் 1160, 2003 இல் 1312 ஓட்டங்களும் சேர்த்திருந்தார் ஹைடன்.

## 5 விக்கெட்டுக்களால் சிம்பாப்வேயை வெற்றிகொண்டது இங்கிலாந்து அணி!

சிம்பாப்வேக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது.


ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி ஹராரே நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது. ஹர்மிசன், பிளின்டொப், மார்கஸ் திரஸ்கொதிக் போன்ற முன்னணி வீரர்கள் இன்றிக் களமிறங்கிய இங்கிலாந்து, நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

சிம்பாப்வே அணியின் முன்வரிசை ஆட்டக்காரர்கள் தங்கள் வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

டெய்லர் (17), மட்சிகென்யேரி (14), சிபாண்டா (6), வேர்முலன் (11), தைபு (5) ஆகியோர் விரைவில் ஆட்டமிழக்க, இந்த அணி 90 ஓட்டங்களில் 5 விக்கெட்டுக்களை இழந்தது. சிக்கும்பரா (52), இப்ராகிம் (45) இணைந்து அணியை மீட்டனர். 49.3 ஓவர்களில் 195 ஓட்டங்களுக்கு சிம்பாப்வே ஆட்டமிழந்தது.

வெற்றிக்கு 196 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து தொடக்க ஆட்டக்காரர் சோலங்கி 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். புதுமுக வீரர் பெல், கப்டன் மைக்கல் வோகன் இணைந்து அணிக்குக் கைகொடுத்தனர். இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்கு 111 ஓட்டங்களைச் சேர்த்தனர். பெல் 75, வோகன் 56 ஆட்டமிழந்ததும், இங்கிலாந்து அணிக்கு சரிவு ஏற்பட்டது. அன்ட்ரூ ஸ்ரரஸ் 8, கொலிங்வூட் 1 ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.


பீட்டர்சன் 27, ஜோன்ஸ் 7 இணைந்து



மேற்கொண்டு சிரமம் இன்றி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். இங்கிலாந்து அணி 47.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 197 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம், முதல் போட்டியை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து வென்று தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது.

## விளையாட்டு

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்ரேலியாவுக்கு வெற்றி உறுதி!



(சிட்னி)

அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்று வரும் நியூஸிலாந்துடனான 2 ஆவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான இன்று அவுஸ்ரேலிய அணி வெற்றிபெறக்கூடிய நிலையில் உள்ளது.

முதல் இனிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 575 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்ரேலியா நேற்று 2 ஆவது இனிங்ஸை தொடர்ந்து ஆடியது.

21 ஓட்டங்களுடன் இருந்த ஹைடனும், 31 ஓட்டங்களுடன் இருந்த லாங்கரும் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடினர். அணியின் எண்ணிக்கை 93 ஆக இருக்கும்போது லாங்கரின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 109 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்றார். எல்.பி.டபிள்யூ முறையில் வைஸ்மன் இவரது விக்கெட்டைக் கைப்பற்றினார்.

அடுத்து பொண்டிங் ஹைடனுடன் இணைந்து ஆடிக்கொண்டிருந்த நிலையில் விற்றோரியின் பந்துவீச்சில் 54 ஓட்டங்களுடன் ஹைடன் ஆட்டமிழந்தார்.

2 விக்கெட் இழப்புக்கு 139 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அவுஸ்ரேலிய அணி அறிவித்தது. பொண்டிங் 26 ஓட்டங்களுடனும் மார்ட்டின் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து முதல் இனிங்ஸில் 251 ஓட்டங்களைப் பெற்றிருந்த நியூஸிலாந்து அணி வெற்றிபெற 463 ஓட்டங்கள் என்ற இலக்குடன் நேற்று 2 ஆவது இனிங்ஸ் ஆட்



டத்தைத் தொடங்கியது.

அவுஸ்ரேலிய அணிப் பந்து வீச்சாளர்களின் அபாரமான பந்துவீச்சால் நியூஸிலாந்து அணி ஆரம்பத்திலேயே திணறத் தொடங்கியது.

34 ஓட்டங்களைப் எடுப்பதற்குள்ளாகவே நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுக்களைப் பறிகொடுக்க நேரிட்டது. சிங்கிளெயர் -2, பிளெமிங் - 3, றிச்சட்ஸன் -16, ஸ்ரைரிஸ் -8, ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்ட



மிழந்தனர்.

இதன்பின்னர் அஸ்ரில் - ஓரம் ஜோடி ஓரளவுக்கு நிதானமாக விளையாடிக்கொண்டிருந்தபோது அஸ்ரில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை நியூஸிலாந்து அணி பெற்று, தோல்வியின் விளிம்பில் நிற்கின்றது.

ஓரம் 40 ஓட்டங்களுடனும் மக்கலம் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.



பெடரேசன் கிண்ண பெண்கள் ரெனிஸ் இறுதிப் போட்டியில் ரஷ்யா 3:2 என்ற கணக்கில் பிரான்சை வென்று சம்பியன் பட்டம் பெற்ற[illegible].

ரஷ்ய வீராங்கனைகள் ஜவானேரவா, அனஸ்டஷியா, எலீனா ஆகியோருடன் அந்நாட்டு முன்னாள் அதிபர் போரிஸ்யெல்ட்சின் இருப்பதைப் படத்தில் காணலாம்.




அமெரிக்காவில் லாஸ் வேகாஸ் நகரில் நடந்த உலக குத்துச்சண்டைப் போட்டியில் மெக்சிக்கோவின் மார்கோ ஆன்டனியோ (வலது), சக நாட்டு வீரரான எரிக் மோராலசை எதிர்த்து மோதினார். இதில் 12 ஆவது சுற்றில் ஆன்டனியோ வெற்றிபெற்றார்.

# முறையான கல்வித் திட்டமிடல் இன்மையால் திறமையான மாணவர்கள் தண்டிக்கப்படுகின்றனர்

## பட்டதாரி பயிற்சிநெறி ஒன்றுகூடலில் அதிபர் சிவகடாட்சம்

(யாழ்ப்பாணம்)

முறையான கல்வித் திட்டமிடல் இன்மையால், திறமையான மாணவர்கள் எப்போதும் தண்டிக்கப்பட்டே வருகின்றார்கள் என கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சம் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற பட்டதாரிப் பயிற்சி பெறுகின்ற பயிற்சியாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

மாணவர்கள் திறமையை வெளிப்படுத்தி, கல்வி கற்றுப் பரீட்சையில் சித்தி அடைந்ததும் - இரண்டு வருடங்கள் உயர்தரப் பாடங்களைப் பயில வேண்டும் என்ற தண்டனை கிடைக்கிறது.

உயர்தரம் படித்து அதில் சித்தியடைந்ததும் 4 அல்லது 5 வருடம், பல்கலைக்கழக கல்வி எனும் தண்டனை கிடைக்கிறது.

இவற்றை அனுபவித்து, மீண்டு வருகிற பட்டதாரிகளுக்கு மேலும் பயிற்சிநெறி என்றவாறு தண்டனை தொடர்கிறது.

இதற்குக் காரணம் - நாட்டின் முறையான கல்வித் திட்டமிடல், சரியான கல்வித் திட்டமிடல் இன்மையேயாகும்.

சரியான கல்வித் திட்டமிடல் மூலமாக எதிர்காலத்தில் இத்தகைய குறைகள் களையப்பட வேண்டும்.

பட்டதாரிகள் - அரசின் பயிற்சியையும், தொழில் வாய்ப்பையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலை மாறி, சுய தொழில்களில் ஈடுபட வழியேற்படவேண்டும்.

இந்த நிகழ்வில் பட்டதாரிகளின் பயிற்சி மைய இணைப்பாளர் கனகரத்தினம். கோப்பாய் கல்விக் கோட்ட அதிகாரி சிவஞானசுந்தரம், வலிகாமக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் முத்துராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கோப்பாய் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

(12)

### மாவீரர்தின நிகழ்வு

தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாள் நிகழ்வு தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுடன், மாவீரர் தின நிகழ்வும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.



யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வின்போது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் சிறப்பு விருந்தினர்கள், நலன்விரும்பிகளை விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (113)

# பருத்தித்துறை மீன் பதனிடும் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரிக்கை

## நகரசபைக்கு மகஜர்

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் அமைந்துள்ள மீன்பதனிடும் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு, உடன் நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் பருத்தித்துறை நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட மக்கள் கையெழுத்திட்டு அனுப்பி வைத்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பருத்தித்துறை ஐயனார் வீதியும், ஆத்தியடி ஒழுங்கை - விநாயகர் வீதயும், சந்திக்கும் அருகிலுள்ள காணியில் மீன்களைப் பெட்டிகளில் அடைத்து தென்னிலங்கைக்கு அனுப்பும் நிறுவனம் இயங்கி வருகிறது.

சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழில் விரிவடைந்து வருகிறது. ஆனால், சூழல் மாசடைந்து, அருகில் வசிக்கும் நாம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகிறோம்.

இந்த நிறுவனத்தால் வெளியிடப்படும் கழிவுநீர் தேங்கி நிற்பதால், துர்நாற்றம் வீசுவதோடு, நுளம்புத் தொல்லையும் அதிகரிக்கிறது. இதனால் நிலத்தடி நீர் விரைவில் மாசுபடவும் ஏதுவாக அமைக்கிறது.

ஐஸ்கட்டி உடைக்கும் இயந்திரம் பேரிரைச்சலுடன் இரவு - பகலாக இயங்குவதால், இந்தப் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்களும் பாதிப்படைகின்றனர்.

இந்த நிறுவனத்தால் வீசப்படும் மீன்கழிவுகள் - வீடுகள், வீட்டுக் கிணறுகளுக்கு பிராணிகளால் கொண்டு செல்லப்படுகின்றன.

இது சம்பந்தமாக முன்னரும் தங்களுக்கு அயலவர்களால் தெரிவிக்கப்பட்டபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இந்தப் பாதிப்புக்களிலிருந்து அயலவர்களாகிய எம்மை விடுவிப்பதற்கு, நிறுவனத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மகஜரின் பிரதிகள் பருத்தித்துறை பிரதேச செயலர், யாழ். அரசாங்க அதிபர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(14)

### தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு வலிகாமம் மக்களுக்கு உதவி

(வலிகாமம்)

அரசியல் அமைப்புத் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயற்திட்டம் மூலம் - வலி.மேற்கு, வலி. தென்மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவில் 150 குடும்பங்களுக்கு வாளி, நுளம்பு வலை, அரிக்கன் லாம்பு, பிளாஸ்ரிக் கான் போன்ற உபகரணங்கள் வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வலி.மேற்கில் சுழிபுரம் பல்லசுட்டிக் கிராமத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கும் - வலி.தென்மேற்கில் மானிப்பாய் தோரன்தோட்டக் கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சமாதானத்தை உருவாக்குவதற்கு முன்னதாக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இந்தத் தேவைகளை மக்களுக்கு அளிக்கும்போது, சிங்கள, தமிழ் முஸ்லீம் என இனப்பாகுபாடு இல்லாமல். சமத்துவமான ஓர் நிலையை இனங்களுக்கிடையே ஏற்படுத்தும் நோக்கத்துடன், இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டதாக இந்த அமைப்பின் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

(48)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : லோ.கபிலன்
முகவரி : யாழ்ப்பாணம்.

எட்டாவது அகவையில்



பெயர் : ச.ஜெயச்சந்திரன்
முகவரி : வட்டுக்கோட்டை.








நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதையும், வருகைதந்த மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்: தீபன்

### மருதனார்மடம் சந்திக்கு அருகே

# வீதியின் நடுவே பாரிய கிடங்கு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை வீதியிலே மருதனார்மடம் சந்திக்கு அண்மையாக உள்ள வீதியின் நடுவிலே பாரிய கிடங்கொன்று ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பாதையூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மருதனார்மடம் சந்தைப் பகுதி, இராமநாதன் நுண்கலைப் பீடம் என- மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இந்தப் பகுதியில் கிடங்குகள் செப்பனிடப்படாமலிருப்பதனால், வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகவுள்ளது.

இந்தக் கிடங்கை அடையாளப்படுத்துவதற்காக, 'வாகனங்களை நிறுத்தவேண்டாம்' என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அறிவுறுத்தல் பலகையொன்றும் வைக்கப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் இந்த வீதியால் வருவோர் - இந்த அறிவுறுத்தற் பலகையையோ அல்லது கிடங்கையோ கவனிக்காதுவிடின், ஆபத்து ஏற்படலாம். இந்தக் கிடங்குகளை செப்பனிடுவது தொடர்பாக - வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இதுவரை கவனமெடுக்காமை குறித்து, பொது மக்கள் பலரும் விசனம் தெரிவித்தனர்.

வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள வேளையில் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால், விபத்துக்கள் ஏற்படக்கூடாது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

(94)

### முக்கிய கலந்துரையாடல்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக, ஜீ.ரி.இசற் நிறுவனத்தினருடனான முக்கிய கலந்துரையாடலொன்று நாளை இடம்பெறவிருப்பதால், காலை 9.30 மணிக்கு இந்தப் பிரதேசசபைக்குட்பட்ட கிராம அலுவலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ப)

# யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் இலவச கணினிப் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணினி கற்பித்தல் நிலையங்களை அமைகக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள இந்தக் கணினி மையங்களில், அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் இணைந்து, இலவசமாக கணினிக் கற்கைநெறிகளைத் தொடர ஏற்பாடுகள் செய்யப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, கணினி அறிவு என்பவற்றின் மேம்பாடுகளை கவனத்திற்கொண்டே, இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்ட அமுலாக்கலுக்கான ஆலோசனைகள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(17)

### முன்பளளிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகம்

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிப் பாடசாலைகளுக்குப் பயன்தரு மரங்களை விநியோகிக்கும் நிகழ்வு - இன்று நீர்வேலியிலுள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வலி. கிழக்குப் பிரதேசசபையினர் செய்துள்ளதாக பிரதேசசபையின் செயலாளர் தெரிவித்தார். (72)





# மலேரியா நோய்க்கு விடிவு



ஐரோப்பிய நாடுகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்திருப்பதன் காரணமாக, அங்கே மலேரியா நோய் ஏறக்குறைய எல்லா மக்களுக்குமே வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் மலேரியா நோய் ஏறக்குறைய 3 மில்லியன் மக்கள்வரை உலகளாவியரீதியில் கொல்கிறது என, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது. இதற் கு ஒரு காரணம் பொருத்தமான தடுப்பு மருந்து இல்லாதது தான் எனக் கூறப்படுகிறது. காலத்துக்குக் காலம் எத்தனையோ புதியவகை மருந்துகள் மலேரியா நோய்க்கு வந்தாலும், ஒன்றுகூடப் பொருத்தமாக நோயைத் தடுக்கக் கூடியவகையில் இல்லை எனக் கூறப்படுகிறது. உலகின் பிரசித்திபெற்ற மருந்து உற்பத்தி நிறுவனமாகிய கிளாக்ஸோ சிமித் கிளைமின் என்ற நிறுவனம் மொசாம்பிக் என்ற நாட்டில் செய்த சில ஆய்வுகளின்படி,60% மான மக்களுக்கு இந்த நிறுவனம் கொடுத்த மருந்து வெற்றியளித்துள்ளது எனக் கூறப்படுகிறது. ஆனால் அதேவேளை ஆபிரிக்கா போன்ற வறிய நாடுகளில் 500 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கூடுதலான மலேரியா நோயாளிகள் இந்த நோயின் தாக்கத்தால் தங்களின் ஈரல், சிறு நீரகம் அத்துடன் நரம்புத் தொகுதியின் செயற்பாடு ஆகியவற்றை இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இந்தக் கம்பனி கண்டுபிடித்த புதிய தடுப்பு மருந்தின் மூலம் உலகளாவியரீதியில் மலேரியா நோய்க்கு ஒருவிடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

# நொக்கியாவின் புதிய அம்சம்




கையடக்கத் தொலைபேசிகளில் கடைசியாக வந்த தொலைபேசி – நொக்கியா கம்பனி தயாரிப்பான 7610. இதில் காணப்படுகின்ற எல்லாவகையான செயற்பாடுகளும் சங்கேத குறியீடுகள் மூலம் பூட்டப்படக்கூடியவை. இதன் காரணமாக இதைப் பாவிப்பதும் கடினம். அத்துடன் பழுதடைந்தால் திருத்துவதும் கடினம் எனப் பாவனையாளர்கள் கூறுகிறார்கள். இதில் காணப்படுகின்ற இன்னொரு விடயம் என்னவென்றால், ஈமெயில் வைரஸ்களை எதிர்க்கின்ற புறோகிராம் இதிலே காணப்படுவதாகும். இதிலே காணப்படுகின்ற விளையாட்டுக்களும், ஒலி அலைகளும் மிகவும் புதியதாகவும் டிஜிற்றல் அலைகளைக் கொண்டதாகவும் இருக்கிறது. பலத்த போட்டி நிலவுகின்ற மொபைல் தொலைபேசி உற்பத்தி – உலகில் இந்த கண்டுபிடிப்பு மிகவும் உன்னத வரவேற்பை பாவனையாளர்கள் மத்தியில் பெற்றுள்ளது.

சொனிஎரிச்சன், மோட்டோரோலா, பெண்ட் அத்துடன் அரிமா ஆகிய மொபைல் தொலைபேசி உற்பத்தி நிறுவனங்கள் இப்படியான ஆளுமையுடன் கூடிய கையடக்கத் தொலைபேசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றன. இது அவ்வளவாக வெற்றியளிக்கவில்லையென தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகிறார்கள்.

# ஆழ்கடலில்



கடலுக்கடியில் காணப்படுகின்ற சில மர்மமான மிருகங்கள் மற்றும் தாவர இனங்களைக் கண்டறியும் முயற்சியில், சர்வதேச அளவில் ஒரு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அந்த முயற்சி 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்டதாகவும், அத்துடன் 10 வருடத்திட்டத்தைக்கொண்டதாகவும் காணப்படுகிறது. இந்த முயற்சியில் 70 உறுப்பு நாடுகள் சேர்ந்துள்ளன. ஏறக்குறைய 13000 மிருகங்கள் மற்றும் தாவர இனங்கள் வாழ்வதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு 100 மீற்றர் ஆழத்திலும் புதிய புதிய இனங்கள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. அதிலும் ஆயிரக் கணக்கான மீற்றர் ஆழம் செல்லச் செல்ல பிரமிக்கத்தக்க அளவுக்கு, கடல்வாழ் உயிரினங்கள் காணப்படக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. அத்திலாந்திக் சமுத்திரத்தின் நடுப்பகுதியில் காணப்படுகின்ற கணவாய் போன்ற ஒரு வகையான இனம் – பிரமிக்கத்தக்க அளவுக்கு ஏறக்குறைய 80,000 அளவுக்கு இருக்கிறது. உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற மீனினங்களின் எண்ணிக்கை 15482 ஆக இருக்கிறது. ஆனால், அது 2010 ஆம் ஆண்டளவில் 20,000 ஆக மாறக்கூடும் எனக் கருதப்படுகிறது. சிறிய சிறிய மிருகங்கள் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு அதாவது ஆராய்ச்சியாளர்களின் தரவுக்கு எட்டாதபடி, ஏறத்தாழ 6800 ஆகக் காணப்படுகிறது என, இந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# புற்றுநோய்க்குரிய மருந்து



புற்றுநோய்க்குரிய புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் யோர்க் பல்கலைக்கழகம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கே இந்தநோய் அதிகமாக வருகிறது. ஏற்குறைய 250,000 பெண்கள் புற்றுநோயால் வருடா வருடம் இறக்கிறார்கள். இந்த நோய் – முளைப்பருவத்தில் வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடியாது என்பது யாவரும் அறிந்ததே. இதேவேளை இந்தநோய் முற்றிய சில காலங்களுக்குள்ளேயே இறந்து விடுகிறார்கள். ஆய்வுகளிலிருந்து கிடைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், புரோட்டின் குறைபாட்டால்கூடப் புற்றுநோயாளிகள் சேர்த்துக்கொள்கின்ற உணவு வகைகளில் கூடுதலாகப் புரோட்டின் சத்து இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. புற்றுநோய் வைரஸ் உடலில் காணப்படுகின்ற வளரும் கலங்களை அழிக்கிறது. இதன் காரணமாக அங்கே வளர்ச்சிக்குரிய குறைபாடு ஏற்படுகிறது. இதன் மூலம் நோய்கள் மாறாத்தன்மையும் ஏற்படுகிறது. புற்றுநோயை உண்டாக்கின்ற பாரதூரமான வைரஸ் கிருமி ஒன்று, அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது எச்.பீ.வீ என அழைக்கப்படுகிறது. இதை அழிக்கும் மருந்து கண்டுபிடிப்பிலேயே வைத்தியர்கள் தற்போது ஈடுபட்டுக்கொண்டு வருகிறார்கள்.


# பழைய இடம் புதிய தோற்றத்தில்

உலகின் பல இடங்கள் – மக்களால் பார்க்கமுடியாத அளவுக்கும் அத்துடன் ரசிக்க முடியாத அளவுக்கும் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் ஸ்கொட்லாந்தின் வடக்குப் பக்கமாக இருக்கின்ற பாரிய மலைப்பிரதேசம். இதற்கு அருகில் காணப்படுகின்ற ஓர் அழகிய பூங்கா



ஏறக்குறைய 200,000 ஸ்ரேலிங் பவுண்ஸ்களைச் செலவழித்து அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. சில இடங்களுக்கு உல்லாசப் பிரயாணிகள் செல்லாததற்கான காரணம் – அங்கே காணப்படுகின்ற தரைத்தோற்ற அம்சங்கள். ஆனால் சில மலைப்பாங்கான இடங்களையும், மக்கள் உட்புக முடியாத காடுகளையும் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் நவீன முறையில் வீதிகள் மற்றும் பல தரப்பட்ட வசதிகளை ஏற்படுத்தி, மக்களைக் கவரும் இடமாக மாற்றியுள்ளார்கள். சில இடங்களை சினிமாப்படப் பிடிப்புத் தேவைகளுக்காகவும், தற்போது பாவித்து வருகிறார்கள். வட அயர்லாந்து என்ற தேசிய பூங்கா – தற்போது மக்களைக் கவரக்கூடியவாறு மாற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ரோமாபுரியிலும் பல்வேறுபட்ட இடங்கள் மக்கள் அணுகமுடியாத அளவுக்கு இருப்பதாகவும், ஆனால் அவற்றிலேயே காணப்படுகின்ற இயற்கை அமைவுகள் மக்களைக் கவரக்கூடியதாகவும் இருக்கிறது. இவற்றைப் பின்பற்றி உலகின் எல்லா இடங்களிலும் காணப்படுகின்ற உல்லாசப் பயணிகளை கவரக் கூடிய இடங்களை மக்களின்பாவனைக்கு விடுவது மிகவும் சிறந்ததாகும்.

# பரிசோதனைக் குழாய்க்குள் காபனீரொட்சைட்



பிரித்தானியாவைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சிக்குழு ஒன்று காபனீரொட்சைட் வாயுவை சிறிய சிலிண்டர்களில் அடைத்து விற்பனை செய்ய முடியுமா? என்பது பற்றி ஆய்வு செய்துகொண்டிருப்பதாக ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் ஆய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிறிய பரிசோதனைக் குழாய்களில் காபனீரொட்சைட்டுக்களை அடைத்துக் கொடுப்பதன் மூலம், சிறிய தீ விபத்துக்களைத் தடுக்கக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய பரிசோதனைக் குழாய்களைத் தீ விபத்து நடைபெறும் இடங்களில் எறிந்து உடைக்கும்பொழுது, தீயை உடனடியாக அணைக்கமுடியும். ஒட்சிசன் வாயுக்களைக் குழாய்களில் அடைப்பதிலும், காபனீரொட்சைட் வாயுவைக் குழாய்களில் அடைப்பது கடினம் எனக் கூறப்படுகிறது. ஏனெனில் காபனீரொட்சைட்வாயு– ஒட்சிசன் வாயுவிலும்பார்க்கத் திணிவு கூடியது. குறித்த அமுக்கத்தில் இந்த வாயுக்களை அடைக்கும்போது, பாரிய சிலிண்டர் களில் அடைப்பதிலும் பார்க்க, சிறிய பரிசோதனைக் குழாயில் அடைப்பது மிகவும் கடினம் என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனாலும் காபனீரொட்சைட் வாயுக்களில் அடைப்பது என்ற முயற்சியில், உலகளாவிய ரீதியில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. காபனீரொட்சைட் வாயு– ஒட்சிசன் வாயுவிலும் பார்க்க மிகவும் பயனுடையது. எவ்வளவு பயன்கள் இருந்தாலும், தீயணைப்புக்கு இது பயன்படுவது மிகவும் சிறப்பான பயனாக இருப்பதால்தான், சிறிய பரிசோதனைக் குழாய்களில் இதனை அடைப்பது என்ற முயற்சிக்கு வரவேற்புக் கிடைத்துள்ளது.

## திரை விமர்சனம்

# சத்ரபதி



வழமையாகப் படங்களில் வருகின்ற ஒரு நேர்மை தவறாத இராணுவ அதிகாரியின் கதையே இது.

இராணுவத்தில் மேஜராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் சரத்குமார். அவர் ஓய்வு பெற்றுச் சொந்த ஊருக்குத் திரும்பும் பொழுது, ஒரு அரசியல்வாதியால் பொறுமை இழக்க நேரிடுகிறது.

அவர் தன்னுடன் சேர்ந்து பணியாற்றிய 4 வீரர்களின் உதவியுடன், சமூக விரோதிகளை ஒழித்துக்கட்டுகிறார். வழமையாக இப்படியான செயல்களுக்குப் படங்களில் – நீதிமன்றம் என்ன தண்டனை கொடுக்கிறது என்பதுதான் படத்தின் முடிவு.

ஆரம்பத்தில் அமைதியாக இருக்கும் சரத்குமார், பின்பாதியில் சீறும் நடிப்பை வெளிப்படுத்துகிறார். சில சில இடங்களில் செண்டிமெண்ட் காட்சிகளால் மனதைத் தொடுகின்றார்.

குறும்புப் பெண்ணாக வரும் கவர்ச்சிப் புயல் நிகிதா – கதாநாயகி தேவை என்ற விளம்பரத்தை நிரப்பியிருக்கிறார். வில்லன் மகாதேவன் – கூட்டணியை உப்புச் சப்பில்லாதவாறு பயன்படுத்தியிருக்கின்றார்கள். வில்லி பூஜா வேறு. வடிவேலுவின் நகைச்சுவை படத்துக்குத் தேவையானதாக இருக்கிறது.

சண்டைப்பயிற்சி – அனல் அரசு. இது அவருடைய முதலாவது படம். இருந்தாலும் , அனுபவ இயக்குநர்போல் சண்டைப்பயிற்சியைச் செய்திருக்கிறார். கார்த்திக்ராஜாவின் கமரா இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் பாய்ந்திருக்கிறது. பின்னணி இசை – எஸ்.ஏ.ராஜ்குமார். பாடல்கள் ஓரளவு பரவாயில்லை.


ஒரே ஒரு பாடல் காட்சி மட்டும் ஊறுகாய் போல ரம்பாவை ஆடவிட்டிருக்கிறார் இயக்குநர் ஸ்ரீமகேஷ். பல பழைய தேசப்பற்றுப் படங்களின் கலவை தான் இந்தப் படம் என்றாலும் இயக்குநருடைய புத்திசாலித்தனத்தால் பல காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

சத்ரபதி – தேசபதி.

– ஜெயா.

# ஈர்ப்பு சக்தியை அறியும் புறாக்கள்

பூமியினுடைய ஈர்ப்புச்சக்தி மற்றும் காந்த ஈர்ப்பு ஆகியவற்றை அறியும் ஆற்றல் புறாக்களுக்கு இருப்பதாக நியூசிலாந்தின் ஒக்லாந்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எங்கெல்லாம் காந்தவிசை அதிகமாக உள்ளதோ, அங்கே புறாக்கள் தமது அலகுகளால் அவற்றைக் கண்டறிகின்றன.



விஞ்ஞானிகள் பல பறவைகளை எடுத்து இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டார்கள். ஆனாலும் அவர்களுக்குப் புறாக்களிலேயே பெரும்வெற்றி கிடைத்ததாகக் கூறுகிறார்கள். புறாக்களின் நரம்புத்தொகுதி இந்த வகையான ஈர்ப்பு சக்திகளை உணரக்கூடியதாகக் காணப்படுவதே இதற்குக் காரணம் எனவும் கூறுகிறார்கள். 1970 ஆம் ஆண்டிலிருந்தே பறவைகளின் அலகுகளுக்கும், ஈர்ப்புவிசைக்கும் இடையில் ஏதோ ஒரு காரணமிருப்பது பற்றி ஆராயப்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால் தற்போது புறாக்களின் அலகுகளின் மூலம் இந்த ஆராய்ச்சிக்குரிய முடிவு கைகூடியிருப்பது மிகவும் சந்தோசத்தைத் தருகிறது என, ஒக்லாந்து விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். முதலில் காந்தவிசையின் செறிவு எங்கே இருக்கிறதென்பதை, புறாக்கள் மணம் மூலம் அறிந்துகொள்கிறது. இதன் காரணமாக விஞ்ஞானிகள் மட்டத்தில் புறாக்களுக்கு மவுசு அதிகரித்துள்ளது.


# நடக்கும் பல்லிகள்

நாங்கள் தரையில் வாழ்கின்ற பல்லிகளைத்தான் பார்த்திருக்கிறோம். ஆனால் நீரில் நீந்திச் செல்லக்கூடிய பல்லிகள் – நீரிலும் நடக்கக்கூடியன என கார்வா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பசிலிக் பல்லி அல்லது ஜீசஸ் பல்லி – இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது எனக் கூறப்படுகிறது. இந்தவகையான பல்லிகள் அமெரிக்காவில்



குளம் குட்டைகளில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய பல்லிகளைத் தரையிலுள்ள பல்லிகளுடன் ஒப்பிடும்போது, அவற்றினுடைய உடலில் காணப்படுகின்ற ஒரு சிறிய ஈர்ப்புவிசை– பல்லிகளை இரண்டு கால்களில் நடக்க வைக்கின்றன என்று கூறப்படுகிறது. சாதாரணமாக மிருகங்கள் இரண்டு கால்களில் நடப்பது என்பது பெரிதாக ஆச்சரியப்படக்கூடியதாக இல்லை. ஆனாலும், இந்தவகையான பல்லிகள் நீரில் நடப்பது என்பது ஒரு புதுமையான விடயம் மட்டுமல்ல. அத்துடன், இவை தரையிலும் நடக்கக்கூடியதெனக் கூறப்படுகிறது. இவற்றினுடைய அசைவுகளையும், செயற்பாடுகளையும் தனியே எடுத்து ஆராய்ந்தபொழுது, இவற்றினுடைய படைப்பிலேயே இவற்றின் கால்களில் ஒரு பௌதீகவியல் ரீதியான ஒரு சிறப்பம்சம் ஒன்று நீரில் நடக்கக்கூடியவாறு காணப்படுகிறது. இவை சாதாரண பல்லிகளின் நிறத்தைப் போலல்லாமல் இலைப்பச்சை நிறமுடையனவாகவும், மிக நீண்ட உருவத்தை உடையனவாகவும் இருக்கின்றன.

# இருமலுக்கு மருந்தாகும் சொக்லட்



பல தரப்பட்ட நோய்களுக்குக் கார ணியாக அமைகின்றனவாக சொக்லட் கருதப்படுகிறது என, வைத்தியர்கள் கூறுகிறார்கள். ஆனால் விஞ்ஞானிகளின் ஆய்வுகளின்படி, சொக்லட்க்கள் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. அதிர்ச்சிதரக்கூடிய இந்த விடயம் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை உருவாக்கியுள்ளது. ஏனெனில் கசப்பான மருந்துகளைவிட, இனிப்பான சொக்லட்கள் எவ்வளவோ மேல் என, மக்கள் கருதுகிறார்கள். இருமலுக்குரிய மருந்தாக சொக்லட்கள் பாவிக்கப்படலாம் என வைத்திய ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஏறக்குறை 10 இருமல் நோயாளிகள் எடுக்கப்பட்டு, அவர்களுக்கு சொக்லட்கள் கொடுக்கப்பட்டபோது 80 வீதமானோர் குணமடைந்துள்ளார்கள்.

இதன் மூலம் சொக்லட்களில் காணப்படுகின்ற சில இரசாயனப் பொருட்கள் – இருமலுக்குரிய மருந்தாக அமைகிறது. அதிலே கியோபுரோமின் என்ற ஒரு வகையான இரசாயனப் பொருள் இருமல் நோயை குணப்படுத்தக் கூடியதாக உள்ளது. இதேவேளை மக்கள் ஏறக்குறைய 100 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை ஐரோப்பியாவில் மட்டும் இருமல் நோயைக் குணப்படுத்துவதற்காக செலவிடுகிறார்கள் என்ற கருத்துக் கணிப்பு உள்ளது. இதேவேளை மக்கள் இந்த வகை மருந்துகளை எடுப்பதில் காட்டுகின்ற ஆர்வத்தை, சொக்லட்க்களை உண்பதில் எடுக்கவில்லை என வைத்திய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

# டைனோசர் படிவுகள்

உலகின் பழமைமிகுந்த மிருகமாகிய டைனோசருடைய வாழ்வுக்கான ஆதாரங்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. ஏறக்குறைய 125–130 மில்லியன் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த இந்த வகையான மிருகங்கள் – தற்போது ஆய்வுக்காக எடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் மிக முக்கியமான அம்சம் எதுவெனில், அவற்றினுடைய மிக நீளமான கழுத்துக்களாகும். சாதாரணமாகக் கட்டையான கழுத்துக்கள் கொண்ட டைனோசர் மிருகங்களே வாழ்ந்து வந்தன. ஆனால் தற்போது மிக நீளமான கழுத்துகள் என்பது ஒரு புதுமையானதென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.



இவற்றின் எலும்புகளும், மண்டை ஓடுகளும் 115 அடி நீளமானதாக இருக்கும் என கூற வைக்கின்றன. அதேவேளை ஏறக்குறைய 50 தொன்கள் நிறை கொண்டதாகவும் இருக்கும் எனக் கருதப்படுகிறது. 1877 ஆம் ஆண்டளவில் வட அமெரிக்காவில் இப்படியான மிருகங்களின் படிவுகள் கண்டெடுக்கப்பட்டன என, வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. மிக நீளமானதும் அத்துடன் நிறை கூடியதுமான டைனோசர் இனங்கள் ஐரோப்பாவில் மட்டுமல்ல, போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் வாழ்ந்தன என ஆய்வுகள் கூறுகின்றன. ஜல் என்ற இடத்திலுள்ள பொருட் காட்சிச்சாலையில் பல வகையான டைனோசர் இனங்களின் எலும்புக்கள் மற்றும் மண்டை ஓடுகள் காணப்படுகின்றன. இதன் மூலம் டைனோசர் இனங்கள் பற்றிய ஆராய்ச்சியில் புது உத்வேகம் பிறந்துள்ளது.

# தொலைபேசித் திருடர்கள் உஷார்

கையடக்கத் தொலைபேசிகள் களவு போவது தற்போது உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளது. அதைக் கண்டறிவதற்கு தற்பொழுது புதிய வகை முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இலகுவாக தொலைந்த கையடக்கத் தொலைபேசிகளைக் கண்டறியக் கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பாவில் மட்டும் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, கடந்த மூன்று வருடங்களில் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களில் அரைவாசிப்பேர் கையடக்கத் தொலைபேசியைத் தொலைத்துள்ளனர். தற்போது ஐரோப்பாவில் மட்டும் மாதாந்தம் 10.000 தொலைபேசிகள் வரை தொலைகின்றன.




இதைக் கண்டுபிடிப்பதற்கு கையடக்கத் தொலைபேசியினுடைய அடையாளம் காணும் இலக்கத்தைக் கண்டறிய வேண்டிய தேவை இருக்கிறது. இது அங்கே காணப்படுகின்ற கீ – போட்டிலுள்ள *#06# என்பதை அழுத்தும்போது பெறக் கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. இந்த இலக்கத்தைப் பொலிஸாரிடம் கொடுக்கும் போது, அவர்கள் கையடக்கத் தொலைபேசி வலைப்பின்னல் மூலம் அந்தத் தொலைபேசி பாவனையாளர்களைக் கண்டறியக் கூடியதாக உள்ளது. இதுதொலைபேசித் திருடர்களின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. ஆரம்பத்தில் தொலைபேசித் திருட்டை ஒரு வியாபாரமாகக் கொண்ட பலர், தற்பொழுது களவாடப்பட்ட தொலைபேசிகளை அகற்றுவதில் மிக முனைப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

# வவுனியா கமநலத் திணைக்களத்தால்

# நியாப் - II திட்ட அறிமுகமும், செயலமர்வும்

வடக்கு- கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ், நியாப்-II திட்ட அறிமுகமும், திட்ட அமுலாக்கல் சம்பந்தமான செயலமர்வும் இன்று வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களப் பயிற்சி மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு வவுனியா அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் நியாப் II திட்ட அறிமுகம், திட்ட அமுலாக்கல் சம்பந்தமான பல கருத்துக்கள் முன்வைக்கப்படவுள்ளன.

இதில் நியாப் - II 'திட்ட அறிமுகமும் நடைமுறைகளும்' என்னும் தலைப்பில் வவுனியா நியாப் திட்டப் பணிப்பாளர் பி.இராமநாதன் உரை நிகழ்ததவுள்ளார். நியாப் - II திட்ட மையக் கிராமத் தெரிவுமுறை பற்றி, நியாப் திட்ட முகாமைத்துவப்பிரிவு எம்.ஜெகநாதனும், நியாப் திட்டத்தின் சமூக வலுவூட்டல் அமுலாக்கத்தில் பெற்ற அனுபவங்களும், நியாப் - II திட்டத்துக்துக்கான அணுகுமுறைகள் பற்றி டெனிஷ் அகதிகள் பேரவை ப.ஜெயஸ்ரீயும் நியாப் திட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் பங்கேற்பும், கணக்குப் பேணுதல் சம்பந்தமான ஆய்வும், நியாப் -II திட்டத்துக்கான வழிகாட்டல்களும் எனும் தலைப்பில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.தெய்வேந்திரமும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இவற்றைவிட, நியாப் திட்டததின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் பங்கேற்பும், கணக்குப் பேணுதல் சமபந்தமான ஆய்வும், வழிகாட்டல்களும், குளம் புனரமைப்பு அமுலாக்கலில் எதிர்கொண்ட பிரச்சினைகளும், நியாப் - II திட்டத்துக்கான அணுகுமுறைகளும், கிராமிய வீதிப் புனரமைப்பு அனுபவங்களும் இவற்றை இந்தத் திட்டத்தில் பாவிப்பதற்கான புதிய உத்திகளும், ஜீவனோபாய செயற்பாட்டுத்திட்ட அனுபவங்கள் பற்றியும் -

இந்தத் திட்டத்தை முன் னெடுத்தல், குடிநீர்க் கிணறு தெரிவிலும் அமுலாக்கலிலும் பெற்ற அனுபவம் பற்றியும் - இந்தத் திட்டத்தில் முன்னெடுப்பதற்கான திட்டமிடலும, நியாப் திட்டம் , தொழில்நுட்ப ஆய்வாளர்களின் கண்ணோட்டம் பற்றியும் - இந்த திட்டத்துக்கான அணுகுமுறை, விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரின் பார்வை பற்றியும் -

இந்தத் திட்ட மையக் கிராமங்கள் தெரிவு, திட்ட அமுலாக்கல் நடைமுறைகள் பற்றியும் - இந்தத் திட்டத்துக்கான பொருத்தமான அணுகுமுறையும், விடுதலைப் புலிகளின் பொருணமியத் துறையினரின் பார்வையில் குள வேலைத்திட்ட நடைமுறைகள் பற்றியும் - இந்தத் திட்டத்துக்கான பொருத்தமான அணுகுமுறை பற்றியும் கருத்தமர்வுகள் இடம்பெறவுள்ளன. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர்களின் உரை, நிகழ்வுகளின் கருத்தோட்டம், நிகழ்வுகளின் தொகுப்புரை என்பனவும் இடம்பெறவுள்ளன.

### மாவரர் தினத்தில் 8 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கல்

மாவீரா் தினத்தை முன்னிட்டு ஐககிய பொருண்மிய மதியுரையகத்தின் நிதியுதவியுடன் 8 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், முளளியவளை, அளம்பில், வன்னிவிளாங்குளம், ஆலங்குளம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும் - மன்னார் மாவட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான், ஆண்டான்குளம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும் யாழ். மாவட்டத்தில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கும் இவை வழஙகப்பட்டன.



வட்டக்கச்சி நாவலர் வீதியில் இருமருங்கிலும் தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்றுவதற்காக வீதிக்கு குறுக்காக வாய்க்கால் வெட்டப் பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். படம் : சீலன்

மருதங்கேணி வைத்தியசாலையில் கடமைக்கு

# இரண்டு வைத்திய அதிகாரிகளை நியமிக்க கோரிக்கை

மருதங்கேணி கிராமிய வைத்தியாலை - போர் அனர்த்தங்களால் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முற்றாகச் சேதமடைந்தபின், ஒரு மருந்தகம் மட்டுமே இயங்கி வந்தது.

சுமார் 275 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்ட மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு இரண்டு வைத்திய அதிகாரிகளை நியமிக்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் விடுதி, பிரசவ விடுதி, வெளி நோயாளர்கள் பிரிவு ஆகியவற்றை தனித்து ஒரு வைத்திய அதிகாரியால் கவனிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

அத்துடன், இந்த வைத்தியர் ஓய்வு பெற்றுச் சென்றால், கிராமிய வைத்தியசாலையின் பணிகள் சகலதும் முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படும்.

இவற்றைக் கவனத்தில கொண்டு மருதங்கேணி கிராமிய வைத்திய சாலைக்கு இரண்டு வைத்திய அதிகாரிகளை நியமிக்கும்படி, பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு, மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச்சபை, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக் குழு என்பன கோரிக்கை விடுத்துள்ளன. (21)

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

வன்னிப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்த மழையால், ஆயிரக்கணக்கான வீடுகளில் மழை நீர் புகுந்துள்ளதுடன், மண் வீடுகளின் சுவர்களும் இடிந்து வீழ்ந்துள்ளன.

பரந்தன், விசுவமடு, உடையார் கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, நெடுங்கேணி, நயினாமடு, புளியங் குளம், துணுக்காய், கிளிநொச்சி, அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், முழங்காவில், பூநகரி, வெள்ளாங்குளம், இலுப்பைக் கடவை, கள்ளியடி, ஆண்டாங்குளம், அடம்பன், வெள்ளமடு, பாலம்பிட்டி, தட்சணாமடு, பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடுகளில் இவ்வாறு மழைநீர் உப்புகுந்ததால் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ள நிலையில் காணப்படுகிறன.

இந்தப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பெரும் சிரமஙகளை எதிர்நோக்கி வருகின்றனர்.




### கலந்துரையாடல்

வவுனியா மாவட்டப் பிள்ளைகளின் கல்வித்தரம் தொடர்பான கலந்துரையாடல் - நேற்று மாலை 3.00 மணிக்கு அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாணவரகள் பாடசாலைக்கு மீளச் செயதல், இழந்த கல்வியை மீளப்பெறல், பாடசாலை பிள்ளைகளின் கல்வித்தரம் என்பனபற்றி ஆராயப்பட்டன.

இதில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வெற்றிலைக்கேணி வெளிச்சவீட்டில் மீண்டும் மின்சார வசதி !

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில், வெற்றிலைக்கேணிக் கிராமத்தில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட வெளிச்சம் வீட்டில் - மின் விளக்கு இல்லாததால் மின் விளக்குப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை, வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அபிவிருத்திப் பகுதியினரால், தேசியத் தலைவரின் பிறந்தநாளை ஒட்டி கடந்த வெள்ளிக்கிழமை கோரியில் மின் விளக்கு ஏற்றும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செலலும் கடற்தொழிலாளர்கள் - அதிகாலை வேளையிலும், மழை இருடடுக் காலஙகளிலும் கரை திரும்புவதற்கான வெளிச்சமில்லாமையால், மிகுந்த சிரமமடைந்தனர்.

கோரியில் மின்விளக்குப் பொருத்துவதன் மூலம் இரவுவேளைகளில் எந்த நேரமும் கடற்தொழிலாளர்கள் கரை திரும்பக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. (21)

# வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு

அண்மையில் பெய்த அடை மழையால, இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் உயர்வடைந்து, குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்பட்டது.

இந்தவேளையில் -. பன்னங்கண்டி, மருதநகர் பகுதிகளிலுள்ள குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால், மருதநகரில் 7 குடும்பங்களும், சிவிக் சென்ரர் பன்னங்கண்டியில் 28 குடும்பங்களுமாக மொத்தம் 35 குடும்பங்களைச் சேர்ந்த - 170 அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்து வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

வடக்கு- கிழக்கு அபிவிருத்தி நிறுவனம். சிவிக் சென்ரர் பன்னங்கண்டி கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழகம் ஆகியன இணைந்து, சமைத்த உணவை வழங்கி வருகின்றன.

இடம் பெயர்ந்தோரில் கைக் குழந்தைகள், வயோதிபர்கள் ஆகியோரும் அடங்குவர். (9)

### அரச உத்தியோகத்தர்களுக்கு காணிகள் வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி பிரதேசகளிலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான குடியிருப்புக் காணிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை காணிகள் அற்ற அரச ஊழியர் சங்கம் முன்நின்று செயற்படுத்தி வருகின்றது.

இந்தக் காணிகளைப் பெறுவதற்கு அரச ஊழியர்கள் கிளிநொச்சி நகர்ப் பகுதியில் வசிப்பாகளாக இருத்தல் வேண்டும்.

இந்த பிரதேசத்தில் காணிகள் அற்ற அரச ஊழியர் பலர் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அடிப்படை வசதிகளற்ற நிலையில் கரும்புள்ளியான் பிரதேசம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரும் புள்ளியான் பிரதேச மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கரும் புள்ளியான் பிரதேசத்தில், 130 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், இந்தக் கிராமத்தின் பிரதான வீதிமுதல் சிறுகுடியிருப்பு வீதிகள் வரை கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாது உள்ளன.

இந்த வீதிகள் யாவும் மழைநீர் ஓடும் வாய்க்கால்களாகவே காணப் படுகின்றன.

# லெப்டினன்ட் கேணல் அன்புவின் நினைவுத்தூபி திறந்து வைப்பு

முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத் தளபதி லெப்.கேணல் அன்புவின் திருவுருவப் படம் தாங்கிய தூபி- ஒட்டுசுட்டான் முல்லைத்தீவுச் சந்தியில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கபபட்டது. இந்த நிகழ்வு - ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் கதிர் தலைமையில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவுச் சந்தியில் அமைந்துள்ள இந்தத் தூபி கடந்தகால இராணுவ நடவடிக்கையின்போது சேதமடைந்தது.

சேதமடைந்த இந்தத் தூபியை வன்னியன் தொழில கத்தால் மீள புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை முறியடிப்புப் படை அணித் தளபதி மாசன் ஏற்றிவைத்தார். நினைவுத் தூபியை நிதித் துறையைச் சேர்ந்த போராளி பாண்டியன் திறந்து வைத்தார். இதில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம், பிரதேச கோட்டப் பொறுப்பாளர் ஈழவன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழீழ நிதித்துறையால் கல்வி மேம்பாட்டுக்கு ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழீழ நிதித் துறையால் கல்வி மேம்பாட்டு நிதியம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

ஆண்டுதோறும் ஒருகோடி ரூபா இந்த நிதியத்தால் ஒதுக்கப்படவுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தமிழ்மொழித்திறன் தேர்விலும், பொது அறிவு மற்றும் உளச்சார்புத் தேர்விலும் சிறந்த பெறுபேறு பெறுவோருக்கும் இந்த நிதியத்திலிருந்து பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

தமிழீழத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரத் தேர்வில் சிறந்த பெறுபேறுகளுடன் சித்தி பெற்று. நிதிவாய்ப்பின்றித் தொடர்ந்து கற்கமுடியாத மாணவருக்கும், பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதில் நிதிச் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் தமிழ், இணைந்த கணிதம். இணைந்த உயிரியல், புள்ளிவிபரவியல், பொருளியல், புவியியல், பௌதீகம், ஆங்கிலம், இரசாயனம், வரலாறு, கணக்கியல், வணிகக்கல்வி, ஆகிய பாடங்களில் பொருத்தமான ஏதாவது மூன்று பாடங்கள் இணைந்த கற்கைநெறியை மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்தில் தமிழ், மருத்துவம், வணிகவியல், பொருளியல், சட்டம், கணிதம, பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கணினி அறிவியல், ஆங்கிலம், பொறியியல், முகாமைத்துவம், புவியியல், வேளாண்மை, வரலாறு, ஆகிய பாடங்களைக் கற்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டில் தமிழ் மொழித்திறனுக்கு 25 லட்சமும், பொது அறிவும் உளச்சார்புக்கு 25 லட்சமும், க.பொ.த உயர்தரக் கல்விக்கு 25 லட்சமும், பல்கலைக் கழகத்துக்கு 25 லட்சமுமாக ஒதுக்கப்படவுள்ளது.



வட்டக்கச்சி சந்தையடியிலிருந்து இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதியிலுள்ள கோஸ்வே பகுதியில் வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் வெள்ளத்தால் பயணிகள் கால்நடையாகச் செல்வதைப் படத்தில் காணலாம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து*
*மாணாத செய்வான் பகை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விளைவு விபரீதமாகும்!

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையின் தமிழ் மக்களுக் கெதிரான வன்முறைகளை சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் மீண்டும் கட்டவிழ்த்து விட்டி ருக்கின்றன.

. படிப்படியாக சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக அபகரிக்கப்பட்டு வந்த திருகோணமலையில் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து 1983 இற்குப் பின்னர் தமிழரை முற்றாகவே விரட்டி அடிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டன.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொந்த இடங்கள், கிராமங்களிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டதுடன் பெருமளவானோர் படுகொலை செய்யப்பட்டனர்.

பல கிராமங்களை விட்டு முற்றாகவே வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களில் குறிப்பிட்ட அளவானோர் புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் மீளக் குடியமர்ந்திருக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில்தான் - திருகோணமலையில் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் மீளவும் ஆரம்பிக் கப்பட்டிருக்கின்றன. புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ புலிகள் முகாம்களை அமைத்து வருவதாக படைத்தரப்பு, சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் திட்டமிட்ட பொய்ப்பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தன.

ஆனால், திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப் புலிகள் முகாம் அமைத்து வருவதான முறைப்பாடுகளை விசாரித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அது தவறானதென நிராகரித்திருந்தது.

தமது பொய்ப் பிரசாரங்கள் யாவும் பிசு பிசுத்துப் போன நிலையில்- கடந்த வாரம் திருகோண மலை நகரில் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வு மற்றும் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பும் நோக்கில் - ஜே.வி.பியும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளும் திட்ட மிட்ட வன்முறையில் இறங்கியிருந்தன.

நோர்வே அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்வதாகக் குற்றம் சாட்டிய ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த ஜெயசேகர தலைமையிலான சிங்களக் காடையர்கள், வன்முறையில் இறங்கியதால் பதற்ற நிலை உருவாகியது.

இந்தப் பதற்ற நிலை காரணமாக பலர் காயமடையவும் நேரிட்டது.

மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பும் நோக்கில் திட்டமிட்டதொருசம்பவம் என்பதுடன் மாவீரர் தினத்துக்கு எதிராக உண்மை வீரர்கள் தினம் என்ற ஒரு தினத்தை அனுஷ்டிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

இவையெல்லாம் தமிழ் மக்களை அச்சுறுத்தி மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தாமல் தடுப்பதும் வன்முறைகளைத் தூண்டிவிட்டு தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சதியாகவே கருதப்படுகிறது.

நோர்வேக்கு எதிராக ஜே.வி.பியினர் போராட்டம் நடத்துவதானால் - அதற்கு திருகோணமலையைத் தேர்ந்திருக்கத் தேவையில்லை. அந்த எதிர்ப்பு நிகழ்வை கொழும்பில் நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக நடத்தியிருக்கலாம். அங்குதான் அடிக்கடி நடந்தும் வருகிறது.

நிலைமை அப்படி இருக்கும் போது - தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையில் பதற்றத்தைத் தோற்றுவித்து - தமிழ் மக்களை மீண்டும் அடக்கி ஆழவே ஜே.வி.பி முற்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாகிறது.

தமிழ் மக்களை திருகோணமலை நகரத்திலிருந்து விரட்டியடிக்கும் பாரிய சதியைக் கொண்ட இந்தத் திட்டத்துக்கு - எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போதும் அதிலும் சில திட்டமிட்ட வன்முறை நடவடிக்கைகள் சிங்களக் காடையர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இன்றும் கூட திருகோணமலையில் ஹர்த்தால் என்ற பெயரில் வன்முறைகளைத் தூண்டிவிட ஜே.வி.பி முற்படுவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.

திருகோணமலை வன்முறைச் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாதெனவும் இந்த வன்முறைகளுக்கு சிங்களக் காடையர்களும், பொலிஸாருமே பொறுப்பு என்றும் கண்காணிப்புக் குழுவே குற்றம் சாட்டியுள்ளது.

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோண மலையில் பதற்றத்தை ஏற்படுத்தி அங்கு கொதி நிலையைத் தோற்றுவித்து - அதன் மூலம் தமிழ் மக்களை விரட்டியடிக்கலாம் என்று மீண்டும் சிங்களப் பேரினவாதம் மனப் பால் குடிக்கிறது.

ஆனால், ஒன்றைமட்டும் சிங்களப் பேரினவாத சக்திகள் நினைவில் கொள்ள வேண்டும். தமிழர் தரப்பு என்றுமில்லாத படைபலத்துடன் தான் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. பொறுமையின் எல்லையில் நிற்கும் தமிழர் படையை சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்க நினைத்தால் அதன் விளைவு விபரீதமாகிவிடும்.

# நாடும் நடப்பும்

செய்தி:-"தலைவர் பிரபாவின் மாவீரர் தின உரை குறித்து ஜனாதிபதி தீவிரமாக ஆராய்வு!"




# மாவீரர் தின நிகழ்வுகளைப் பொறுக்காத ஜே.வி.பியின் உண்மை வீரர் தின அழைப்பு !

திருமலையில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளைக் குழப்பி, சிங்களவர்கள் அட்டகாசம் புரிந்துள்ளமை, புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுதான்.

1977 ஆம் ஆண்டு தந்தை செல்வாவின் அஸ்தியை ஊர்வலமாகக்கொண்டு சென்றதையே பொறுக்கமாட்டாமல் குழப்பி, அட்டகாசம் புரிந்ததுடன் தொடர்ந்து இரு தமிழர்களையும் கொன்ற சிங்களவர்கள் மற்றும்' அவர்களின் பிள்ளைகள் தற்போது சிங்கள இராணுவத்துக்கெதிராகப் போராடி வீரச்சாவடைந்தவர்களைப் போற்றித் துதிப்பதை எப்படித்தான் சகிப்பர்?

கடந்த வருடங்களிலும் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றனதான். ஆனால், இந்த வருடம் தேசியத் தலைவரின் பொன்விழா நிகழ்வுகளில் தமிழர்கள் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டதே இந்த வருடக் குழப்பங்களுக்குக் காரணம்.

சோமவன்ச அமரசிங்கவினதோ, விமல் வீரவன்சவினதோ ரில்வின் சில்வாவினதோ பிறந்த நாளைக் கொண்டாட தமிழர்கள் எந்த வகையில் இடைஞ்சலாக இருந்தார்கள்.

ஜே.வி.பியினர் அவ்வாறு ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தை நடத்திப் பார்க்கட்டும். அல்லது ரணிலின் பிறந்த நாளை ஐ.தே.கட்சியினரோ, சந்திரிகாவின் பிறந்தநாளை ஐக்கிய முன்னணியினரோ கொண்டாடிப் பாரத்தால், எத்தனை வீதமான சிங்களவர்கள் உணர்வுபூர்வமாக இவர்களை ஏற்றுக்கொண்டார்கள் என்ற யதார்த்தம் புரியும்.

இந்த வருட மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதற்கு திருமலை மாவட்ட ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தலைமை தாங்கினார் என்ற செய்தி பல வினாக்களை எழுப்பக் காரணமாகிறது.

அத்துடன், விடுதலைப் புலிகளுடனான போரில் உயிரிழந்த இராணுவத்தினரை நினைவு கூருமுகமாக 'உண்மை வீரர்கள் தினம்' (நவம்பர் 27) என அவர் அழைப்பு விடுத்த போது, கண்ணீர்ப் புகைக்குண்டுக்கே தாக்குப்பிடிக்க முடியாமல் இந்த உண்மை(?) வீரர்களின் அனுதாபிகள் ஓட்டம் பிடித்துள்ளனர் என்ற உண்மையும் சிங்களவர்களுக்கு தமது 'அளவு' என்ன என்பதை உணர்த்தியிருக்கும்.

ஜயந்த விஜயசேகர திருமலைக் கடற்படைத் தளத்தில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் திருமதி றோகண விஜயவீரவை வெளிக்கொண்டுவர ஏதாவது முயற்சி எடுத்தாரா என்பது முதலாவது கேள்வி. அப்படியே திருமதி றோகண விஜயவீர விடுவிக்கப்பட்டாலும், ஜே.வி.பியினரை நம்பி வெளியில் வர அவர் தயாரா? என்பதும் அடுத்த கேள்வி.

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டதுபோல் கார்த்திகை வீரர்கள் தினம் என்று இலங்கைப் படையினரால் கொல்லப்பட்ட தமது உறுப்பினர்களை நினைவுகூரும் தினம் ஒன்றை ஜே.வி.பியினர் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

இதில் எந்தளவுக்கு வெற்றி கிடைத்தது? சிங்களவர்களின் போற்றுதலுக்குரியவர்களாக எந்தக் காலத்தில்தான் றோகண விஜயவீரவோ ஏனைய ஜே.வி.பி உறுப்பினர்களோ இருந்துள்ளனர்?

றோகண விஜயவீரவைக் கைதுசெய்ய, ஒரு தையல் இயந்திரம் கொள்வனவு செய்த சிட்டையே போதுமானதாக இருந்தது. அந்தளவுக்குத்தான் தனது பாதுகாப்புத் தொடர்பான தீர்க்க தரிசனம் றோகண விஜயவீரவுக்கு இருந்தது.

கைதானதும் எவ்வளவு மணிநேரம்தான் இவரால் தாக்குப் பிடிக்கமுடிந்தது? ஓரிரு மணித்தியாலத்துக்குள்ளேயே போராட்டத்தைக் கைவிடுங்கள் என்று பகிரங்கமாக ரூபவாஹினி மூலம் அறிவித்த சிறிது நேரத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்ட றோகண விஜயவீர எங்கே? சுற்றிவளைப்பில் இயக்க இரகசியம் தெரியக்கூடாது என்பதற்காக சயனைற் அருந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சாதாரண விடுதலை புலி போராளி எங்கே?

இந்தச் சாதாரண போராளியின் தகுதியில் ஆயிரத்தில் ஒரு பங்காவது, இரு தடவைகள் தான் மேற்கொண்ட கிளர்ச்சிகளின்போதும், முடிவில் உயிருடன் கைதாகிய றோகண விஜயவீரவுக்கு உண்டா? இந்த இலட்சணத்தில் கார்த்திகை வீரர்கள் தினம் எவ்வாறு ஏற்படும்'

ஒரு பக்கம் இலங்கை இராணுவத்தால் சொல்லப்பட்ட ஜே.வி.பியினருக்காக கார்த்திகை வீரர்கள் தினம். மறு பக்கத்தில் இராணுவ வீரர்களுக்காக உண்மை வீரர்கள் தினம் ஜயந்த விஜயசேகர உண்மையிலேயே ரொம்பத்தான் குழம்பிவிட்டார்.

சுமார் பதினெட்டாயிரம் மாவீரர்கள் என்றால் வட - கிழக்குத் தமிழர்களின் எண்ணிக்கையைப் பார்க்கவேண்டும். அந்த வகையில் பதினெட்டாயிரம் என்பது மிகவும் பெரிய தொகை. அதாவது வட - கிழக்கில் உள்ள ஒவ்வொரு தமிழனதும் யாரோ ஒரு இரத்த உறவினர் மாவீரர் ஆகியுள்ளனர்.

எனவே மாவீரர் நாள் நிகழ்வு குறித்த அம்சங்கள் (தேசியக் கொடி ஏற்றல் உட்பட) அவர்களுக்கு இரத்தமும், சதையுமான விடயங்கள். இந்த மாவீரர்கள் போராடித்தான் வீரச்சாவடைந்தார்கள்.

றோகண விஜயவீரவின் முட்டாள்தனமாக வழிநடத்தலால், ரயரில் எரியுண்டு அப்பாவித்தனமாக உயிர் இழந்தவர்களின் விவகாரம் அவ்வாறானதல்ல.

இதைவிட இன்னொரு விடயம் ஜே.வி.பியினரின் கிளர்ச்சிக்காலத்தில் இராணுவத்தினரின் குடும்பத்தினர் என்ற காரணத்துக்காகக் கொல்லப்பட்ட சிங்களவர்கள் இந்தக் கார்த்திகை வீரர்கள் தினத்துக்கு எந்தளவுக்கு மனதில் இடம்கொடுப்பார்கள்?

என்னதான் இருந்தாலும் சிங்கள மக்களின் அனைத்துத் தரப்பினரும் கார்த்திகை வீரர்களைக் கௌரவிக்கத் தயாராக இல்லை. அந்தளவுக்கு சிங்களவர்களிடையே ஜே.வி.பி வேரோடியிருக்கவில்லை.

அதாவது - மாவீரர்களுக்கு தமிழ் மக்கள் கொடுக்கும் கௌரவம் சிங்களர்களிடையே கார்த்திகை வீரர்களுக்கு இல்லை என்பதே யதார்த்தம்.

இந்த வெப்பிசாரத்தில்தான் மனம் புழுங்கி இவ்வளவு கலாட்டாவையும் செய்துள்ளார் ஜயந்த விஜயசேகர. தமிழில் ஒரு பழமொழியுண்டு. 'கூந்தல் உள்ள மகராசி கொண்டை போட்டுக் கொள்வாள்' என்று. அதாவது, இதற்காக மொட்டைச்சி அழுது குழறி என்ன பயன்? என்பதே அதன் அர்த்தம்.

மொத்தத்தில் தேசியத் தலைவரின் பொன்விழா நிகழ்வுகள், மாவீரர் நாள் நிகழ்வுகள் குறித்த ஜே.வி.பியினரின் வெப்பிசாரத்தின் விளைவே, மாவீரர் நாள் நிகழ்வுகளைக் குழப்பும் முயற்சிகளும், உண்மை வீரர்கள் தின அழைப்புமாகும். இதைவிட இன்னும் பல விடயங்களைக் காலம் விரைவில் ஜயந்த விஜயசேகரவுக்கு உணர்த்தும்.

- சங்கர்.

## கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் வேறு பல அமைப்புக்களுடன் இணைந்து கொடிவாரமொன்றை அனுஷ்டிக்கவுள்ளது. இந்த நிறுவனம் நாளை முதல் தொடர்ந்து 5 நாட்கள் வரை அனுஷ்டிக்கவுள்ள கொடிவார நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர், போரூட், கியூடெக், யுனிசெப், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு, சுகாதாரப் பிரிவு உட்பட இன்னும் பல நிறுவனங்களும் இணைந்து கொள்ளவுள்ளன.

உலக எயிட்ஸ் தினமான டிசம்பர் முதலாம் திகதி யாழ். குடாநாட்டின் அனைத்து பிரதேச செயலங்களிலும், எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான சிறப்பு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதேதினம் அகதிகள் புனர்வாழ்வு நிறு வனத்திலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கொடிவாரத்தின் மூலம் பெறப்படும் நிதி முற்றுமுழுதாக எயிட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கே பயன்படுத்தப்படவுள்ளது. அந்த வகையில் இதுவரை இனங்காணப்பட்ட எயிட்ஸ் நோயாளிகளுக்கும், ஆபத்தான கட்டத்திலுள்ளோருக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் - தொடர்ந்து மூன்றாவது வருடமாக எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான பிரசாரங்களையும், கூட்டங்களையும் யாழ்.குடாநாட்டில் நடத்தி பல செயற்பாடுகளைப் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த)

நேர்காணல்... - வசந் எழில்

# மாவீரர் நாள் உரையும் மக்கள் கருத்துக்களும்...

### கே.மோகன் - கணினி பொறியியல் தொழில்நுட்பவியலாளர், யாழ்ப்பாணம்



தலைவர் சமாதானத்தில் மிகவும் உறுதியாக இருந்தார். ஆனால் அரசாங்கம் இழுத்தடிப்புக்களைச் செய்வதால், தலைவரின் பொறுமை எல்லையை தாண்டி விடக் கூடும். இனியும் பொறுக்கமுடியாது. இந்த சமாதான காலத்தில் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடைக்கவில்லை. பலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டது போல் எமது போராட்டமும் அவ்வாறு மழுங்கடிக்கப்படக் கூடாது. எனவே பேச்சுவார்த்தை என்பது அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது எனவே இனியும் இந்தப் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படாது விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

### ஏ.றெஜினோல்ட் - ஓட்டோ சாரதி



குறிப்பிட்ட காலங்களில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் போரில் இறங்குவது நல்ல வழியேயாகும். பேச்சுக்களை இழுத்தடிப்பதால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மீண்டும் போரில் விடுதலைப்புலிகள் இறங்கினால், மக்களின் ஆதரவு கண்டிப்பாகக் கிடைக்கும். சலுகைகளுக்காக, தற்போதைய சூழல் தொடர்ந்து இருக்கவேண்டும் என்ற கூட்டம் இன்றும் உள்ளது. உரிமையை வென்றெடுக்க வேண்டுமென்ற எண்ணம் நமது மக்கள் மத்தியில் உள்ளது. நமது உரிமைகளை வென்றெடுத்த பின்னர் நாம் நிம்மதியாய் வாழமுடியும். சமாதானத்துக்காக நாம் எப்பொழுதும் சிங்கள அரசாங்கத்தை நம்பிக்கொண்டு இருக்கமுடியாது. தலைவர் கூறியது போல, ஒன்றில் போர் அல்லது சமாதானம். நாங்கள் சமாதானத்தை நம்பி வீட்டைக்கட்டி பின்பு அழிவதிலும் பார்க்க எங்களுக்கென்று ஓர் உரிமையை பெற்றுக்கொண்டு பின்பு சகல வசதிகளுடனும் சுதந்திரமாய் வாழலாம். அரசாங்கத்தை நம்பினால் நடுரோட்டில் தான் நிற்போம். நாம் அங்குமிங்கும் ஓடியும் விடிவில்லாமல் தான் இருக்கிறோம். ஆகவே மீண்டும் சமாதானத்துக்கான போர் தேவைப்படுகிறது.

### அருட்தந்தை L.சேவியர் - யாழ்.


தலைவருடைய உரையானது உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாக அமைந்துள்ளது. எந்த விதமான தீர்வும் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இறுதித்தீர்வு ஒன்று மக்களுக்கு இன்று தேவை. இன்றைக்கு சமாதானம் என்று சொன்னாலும் கூட மக்களுக்கு சமாதானம் என்பது மனதில் கிடையாது. இந்த நிலையில் ஒரு முடிவானது மக்களுக்குக் கிடைக்கவேணும். அப்போதுதான் மக்களுக்கு சந்தோஷம் கிட்டும். அந்த ஒரு நல்ல செய்தியைத்தான் தலைவர் பிரபாகரன் மக்களுக்குக் கூறியுள்ளார்.

### வ.மதியானந்தன் - பட்டதாரி பயிலுநர்



ஜே.வி.பி.யும் சந்திரிகாவும் சமாதான முன்னெடுப்புக்களை முழு மனதுடன் கொண்டு வருவார்கள் என நம்பவில்லை. காலத்தை இழுத்தடிப்பது தமிழ் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் ஒரு செயலாகவே அரசாங்கத்தின் செயற்பாடு உள்ளது. தலைவர் வெளிப்படையாகத் தனது உரையை நிகழ்த்தினாலும், அதில் ஆழமான பல கருத்துகள் உண்டு. அதை சிந்தித்துப் பார்த்தால் போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பதை உணரக்கூடியதாக உள்ளது. இராணுவ சிவில் நிர்வாகத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை. எந்த ஒரு சிறிய பிரச்சினையாயினும் புலிகளையே மக்கள் நாடிச் செல்கின்றனர். மக்கள் சமாதான காலத்திலும் கூட பயபீதியுடன்தான் இருக்கின்றனர். உதாரணத்துக்கு வடமராட்சியில் இரு இளைஞாகள் சுடப்பட்டதைக் கூறலாம். மேலும் மக்கள் செய்த ஹர்த்தாலின்போது இராணுவத்தின் அடாவடித்தனத்தை எதிர்க்கக் கூடிய நிலைக்கு வந்துள்ளனர்.

### மு.ஜெயந்தன் - இயக்குநர் - விக்னா தனியார் கல்வி நிறுவனம் - யாழ்.



பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதை அரசாங்கமும் விளங்க்கொள்ள வேணும். சிங்கள மக்களுக்கும் விளங்கவேணும். அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வந்தது. 'அதேபோல் பேச்சு வார்த்தையை சிறப்பான முறையில் முடிக்க வேணும். இபபடி முடிக்காமல் இழுததடிப்பதால் பேச்சுவார்த்தையில் அர்த்தம் இல்லாமல் போய்விடும். இது அரசாங் கத்துக்கும் இலாபகரமாய்ப் போய்விடும். அரசாங்கம் தனது சூழ்நிலையால் பேச்சுவார்த்தையைத் தொடராமல் இருக்கிறது. அரசாங்கம் நினைத்தாலும், ஜே.வி.பி. போன்ற இனவாத கூட்டுக் கட்சிகளின் ஆதிக்கத்தால் பேச்சுவார்த்தையை தொடர முடியாமல் இருக்கிறது. அரசாங்கம், பேச்சுவார்த்தை என்று சொல்லி நடிக்கிறதே தவிர, அடிமனதில் சமாதானத்தில் நாட்டம் இல்லை. போர்ச் சூழல் இருக்கும்போது, அரசாங்கத்துக்கு அங்கு என்ன நடக்குமோ என்ற பயம் இருந்தது. ஆனால் தற்போது சமாதான காலமாகையால் அவ்வாறான பயம் இல்லை. எனவே இது, அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையை இழுத்தடித்துச் செல்ல வாய்ப்பாக இருக்கிறது.

### ஜி.சந்திரிகா் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி

சமாதானத்துக்காகப் பல விட்டுக் கொடுப்புக்களைக் செய்தாயிற்று. இனியும் விட்டுக் கொடுக்கமுடியாது. எனவே தலைவர் கூறியது போல், போராடித் தான் எமது உரிமையைப் பெற்றுக்கொள்ளவேணும். போர் கடினம்தான். எனினும் வேறு வழியில்லை. இதுவே நியாயமாய்த் தென்படுகிறது.

### ஜனனி பாலசுப்பிரமணியம் - உயர்தர வகுப்பு மாணவி - மானிப்பாய்



தமிழ் மக்களாகிய நாம் அங்குமிங்கும் ஓடி ஓடிப் பலவாறு துன்பப்பட்டோம், ஆனால் சிங்கள மக்களுக்கு அவ்வாறான நிலைமை ஏற்படவில்லை. எமது உறவினர்கள் எலலாம் கொழும்பு போன்ற இடங்களில் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் நாம் துன்பப்பட்டதைச் சொல்ல வேணும். எனவே அவர்களும் நாமும் இணைந்து ஒன்றுபட்ட நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தலாம். தலைவருடைய கருத்துப்படி, அவர் எதற்கும் தயாராய் உள்ளார். எனவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பங்களிப்புச் செய்துதான் சமாதானத்தை வென் றெடுக்கவேணும்.

### எஸ்.அகஸ்ரின் - இளைப்பாறிய ஆசிரியர்

சமாதானம் கூடிய விரைவில் கிடைப்பதுதான் நல்லது. தலைவருடைய உரையைப் பார்க்கும் போது அது வெகு தூரத்தில் இருப்பது போல்தான் தெரிகிறது. காரணம் அரசாங்கத்தின் இழுத்தடிப்பு. எனவே சமாதானத்தை வென்றெடுக்க மக்களின் பங்களிப்பு அவசியம் என்று தலைவர் கூறுகிறார். எனவே மக்கள் இணைந்து செயற்படத் தயாராகவேணும்.

### எஸ்.சண்முகம் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்-தற்போது வியாபாரி



காலாகாலமாய் சிங்கள அரசாங்கங்கள் சமாதானப் பேச்சுக்களைப் பின தள்ளிக்கொண்டே போகினறன. பொறுமையில் எல்லையை இழந்து விட்டோம். எனவே விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேணும். இல்லையேல் போராடித்தான் நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேணும்.

## கொடிகாமம் மருந்தக வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக் கோரிக்கை!

(கொடிகாமம்)

கொடிகாமம் மத்திய மருந்தக பொறுப்பதிகாரியின் இடமாற்றத்தைத் ரத்துச் செய்யுமாறு, வைத்தியசாலை அபிவிருத்திசபையினர் பல தரப்பினருக்கும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக அபிவிருத்தி சபை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு கடித மூலம் தெரிவித்துள்ளனர்.

மருத்துவ அதிகாரியின் பணிக் காலம் குறித்த சட்ட விதிகளின் படி குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஒருவர் 5 வருடகாலம் பணியாற்றலாம் என்ற சட்டவிதிகள் பின்பற்றப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒருவருட காலமாக இந்தப் பிரதேச மக்களுக்கு சேவையாற்றிவரும் இந்த வைத்தியரின் இடமாற்ற உத்தரவை உடனடியாக ரத்துச் செய்யவேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (17)

## சாவகச்சேரி வைத்தியசாலையை மீண்டும் புனரமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் முக்கிய இடத்தை வகிக்கும் சாவகச்சேரி வைத்தியசாலையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு, வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் - கண்சிகிச்சைப் பிரிவு, பற்சிகிச்சைப்பிரிவு ஆகியவற்றைத் தொடங்குவதற்கும் ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான திட்டமிடல்களை இந்தப் பிரதேச மக்களின் பூரண ஆதரவுடன் மேற்கொள்ள வுள்ளதாகவும், அடுத்த ஆண்டு முடிவதற்குள் இந்தப் பிரதேச மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சகல பிரிவுகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். (17)

## ரீடோ நிறுவனம் நடத்தும் மாணவருக்கான கருத்தமர்வு

டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென, நோர்வே மாணவர் நிதியுதவியுடன் ரீடோ நிறுவனத்தால் விசேட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி செயல்திட்ட வள நிலையத்திலும், கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகர் வள நிலையத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பாலி நகரிலும், வவுனிக்குளத்திலும் இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 2,3,4 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 3 மணிவரை இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இதில் விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டிக் குறிப்புகள் வழங்கப் படவுள்ளன.

இதில் இந்த முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பங்குபற்றிப் பயன் பெறலாம் என ரீடோ நிறுவன செயற்திட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

## நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் அடிப்படை வசதிகளின்றி அவதி

யுத்த அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து, தற்பொழுது நாவற்குழி வீட்டுத்திட்டத்தில் குடியேறிய குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இதனால் இந்தப் பகுதி மக்கள் அன்றாட தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாமல் கஷ்டப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதி மக்களுக்கு அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ எந்த உதவிகளையும் செய்து தர முன்வரவில்லை என, மீளக் குடியமர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

அனைத்தும் இழந்து, உடைந்த கட்டடங்களுக்கு மத்தியில் வாழும் இந்தப் பகுதி மக்களுக்கு உடனடியான அடிப்படை உதவிகளைச் செய்து தரும்படி யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பிரதேச செயலகத்துக்கும் கடிதமூலம் கோரிக்கை விடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (17)

## உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான கைநூல் வெளியீடு

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் க.பொ.த உயர்தர விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் கைநூல்கள் வெளியிடப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக பௌதிகவியல் பாடத்துக்கான ஆசிரியர் கைநூல் அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளது. தேவையானவர்கள் யாழ். கல்வி வலயத்தில் இயங்கும் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் 125 ரூபாவை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். முதற்கட்டமாக இரசாயனவியல் பாடத்துக்கான ஆசிரியர் கைநூல் வெளியிடப்பட வுள்ளதாகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (02)

## ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்துக்கு, மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும், கல்விசார் ஊழியர்களும் இணைந்து மாவீரர் தினத்தை முன்னிட்டு சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கி சாதனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாவீரர் தினத்தை முன்னிட்டு, உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம் பெற்ற மாவீரர் கௌரவிப்பு நிகழ்வில் வைத்து இந்த அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மாவீரர் கௌரவிப்பு நிகழ்வில் கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன், மாவீரர் பெற்றோரை கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (14)

# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் மீளவும் விபத்து, 170 பேர் பலி?



சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட திடீர் விபத்தில் 170 பேர் சிக்கிக்கொண்டனர். சீனாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன. கடந்த ஆண்டு இதுபோன்று நடந்த விபத்துகளில் 630 பேர் இறந்தனர். இந்த ஆண்டில் இதுவரை 4 ஆயிரத்து 53 பேர் இறந்துள்ளனர்.

ஹெனான் என்ற இடத்தில் உள்ள சுரங்கத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் நடந்த விபத்தில் 148 பேர் இறந்தனர். இதே சுரங்கத்தில் இந்த மாதம் நடந்த விபத்தில் 33 பேர் இறந்தனர். தொடர்ந்து இதுபோல் விபத்துக்கள் நடப்பதால் அரசு கவலையடைந்துள்ளது.

இந்த நிலையில் நேற்றும் ஒரு விபத்து நடந்துள்ளது. சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ளது ஷான்ஷி மாகாணம். இங்கு சென்ஷியாசன் நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. நிலத்தில் இருந்து 8 ஆயிரம் மீற்றர் ஆழத்தில் இங்கு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது. நேற்றுக் காலை இங்கு 293 பேர் பணியில் இருந்தனர்.

சுரங்கத்தின் நுழைவு வாயிலில் இருந்த தொழிலாளர்கள் கீழ்ப்பகுதியில் இருந்து புகை கிளம்பிவருதைப் பார்த்துள்ளனர். உடன் அனைவரும் கீழ்ப்பகுதியில் பணியில் இருந்தவர்களுடன் தொடர்புகொள்ள முயன்றனர். ஆனால், தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

சுரங்கத்தின் உள்ளே திடீரென வெடிவிபத்து ஏற்பட்டதால் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. எனினும், சுரங்கத்தின் நுழைவுப் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் உட்பட 123 பேர் காப்பாற்றப்பட்டனர்.

சுரங்கத்தில் இருந்த 170 பேர் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், காப்பாற்றப்பட்டவர்களில் பலர் விஷவாயுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். மீட்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. இந்த விபத்துக் குறித்துக் கேள்விப்பட்டதும் உயர் அதிகாரிகள் பலர் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

# மஃமூட் அபாஸிற்கு அல் - அக்ஷா ஆதரவு



பலஸ்தீன ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளராக உள்ள மஃமூட் அபாஸிற்கு - பத்தா அமைப்பின் அல் அக்ஷா மார்ட்டியர் பிரிகேட் தனது ஆதரவை வழங்கியுள்ளது. இந்த அமைப்பின் ஆதரவுமூலம் அபாஸ் மேலும் தனது நிலையைப் பலப்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிதவாதியான அபாஸிற்கு பத்தா அமைப்பின் ஆதரவு கிடைக்குமா என சந்தேகம் எழுப்பப்பட்ட நிலையில், சிறையிலுள்ள அந்த அமைப்பின் தலைவரான மார்வன் பாகௌதி தனது ஆதரவைத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவில்லையெனவும், எனவே தனது ஆதரவாளர்களை அபாஸிற்கு ஆதரவளிக்குமாறும் அவர் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

# 86 ஆவது மாடியிலிருந்து இளைஞர் குதித்து தற்கொலை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் மிக உயரமான கட்டடம் எம்பயர் ஸ்டேட் ஆகும். அந்தக் கட்டடத்தின் 86 ஆவது மாடியில், நகரை கண்டுகளிக்க வசதியாக பார்வையாளர் மாடம் உள்ளது. அங்கிருந்து 30 வயது இளைஞர் ஒருவர் குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

அவரது உடல் 6 ஆவது மாடிக் கூரையில் கிடந்தது. இறந்து போனவர் யார்? எந்த ஊர் என்பன போன்ற விபரங்கள் தெரியவில்லை. அவர் பார்வையாளர் மாடத்தில் பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த 10 அடி உயர தடுப்பு வேலியின் மீது ஏறிக் குதித்ததாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

என்ன காரணத்துக்காக அவர் தற்கொலை செய்துகொண்டார் என்பது தெரியவில்லை.

# நடுத்தர வீச்சுக்கொண்ட ஏவுகணை பாகிஸ்தான் வெற்றிகர பரிசோதனை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசாங்கம் நடுத்தர வீச்சுக்கொண்ட அணுவாயுதத்தை தாங்கிச் செல்லும் ஏவுகணையொன்றை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நடுத்தரவீச்சு ஏவுகணை ஹற்வ் III எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஏவுகணைப் பரிசோதனை குறித்து இந்தியா உட்பட சகல அயல்நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்தது.


இந்த அணுவாயுத சோதனையானது பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசிஷ் இந்தியத் தலைவர்களுடன் புதுடெல்கியில் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹற்வ் III அணுவாயுத ஏவுகணையானது ஆகப்பிந்திய வடிவம் எனவும், அதனையே பரிசோதித்துப் பார்த்ததாகவும் - பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் தெரிவித்தார். அத்துடன் இந்த ஏவுகணை 290 கி.மீ. தூரம் செல்லக்கூடியதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஏவுகணைப் பரிசோதனை மூலம் அயல் நாடான இந்தியாவுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படமாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணுவாயுதம் மற்றும் ஏவுகணைத் திட்டங்களை தொடர்ந்து பராமரிக்கும் அதே வேளை, ஏவுகணைப் பரிசோதனையையும் தொடர்ந்து பரிசோதிக்குமெனவும் பாகிஸ்தான் இராணு வம் தெரிவித்தது. கடந்த மாதம் பாகிஸ்தான் ஹற்வ் V கயூறி என்ற 1500 கி.மீ. செல்லக்கூடிய ஏவுகணையைப் பரிசோதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



20 ஆண்டுகளுக்குப் பின் தாஜ்மகாலை இரவில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததால் சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர். ஆனால், அதிக பனிப் பொழிவு காரணமாக தாஜ்மகாலின் அழகை முழுமையாக ரசிக்கமுடியாமல் பலர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

# 800 ஆண்டு மதகுருக்களின் சடலங்கள் பழமைவாத கிறிஸ்தவரிடம் ஒப்படைப்பு!

(ரோம்)

நல்லுறவைப் புதுப்பிக்கும் வகையில் பழமைவாத 800 ஆண்டு பழமையான கிறிஸ்தவ மதகுருக்களின் சடலங்களை கத்தோலிக்க தலைவர் போப்பாண்டவர் அந்தப் பிரிவினரிடம் ஒப்படைத்தார்.

கொன்ஸ்சாந்திநோபிள் நகரம் துருக்கியர் வசமான பிறகு 1453 இல் பிரிந்து கிடந்த பல்வேறு கிறிஸ்தவ தேவாலயங்களை ஒருங்கிணைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பல முக்கிய குருக்களின் சடலங்கள் ரோம் நகருக்குக் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு 1000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சடலங்களும் கத்தோலிக்கர்களின் தலைமைப்பீடமான வத்திக்கானுக்கு எடுத்துவரப்பட்டன.

அவற்றை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்குமாறு பழமைவாத கிறிஸ்தவர்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்தனர். 1978 இல் போப்பாண்டவராக இரண்டாம் ஜோன்பால் பதவியேற்ற பிறகு பழமைவாய்ந்த கிறிஸ்தவர்களுடன் பல்வேறு சமரச நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

கடந்த 2001 இல் ஏதென்ஸ் நகரில் இரண்டாம் ஜோன்பால் பயணம் மேற்கொண்டார். அப்போது பழமைவாத கிறிஸ்தவர்கள் யூதர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக கத்தோலிக்கர்கள் நடந்து கொண்டமைக்காக யேசுநாதர் எம்மை மன்னிக்கட்டும் என்றார். சிலுவைப் போர்களுக்கும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

அதன் ஒரு பகுதியாக சிலுவைப் போரில் கைப்பற்றப்பட்ட 800 ஆண்டு பழமைவாய்ந்த இரண்டு பழமைவாத கிறிஸ்தவ குருமார்களின் சடங்களை அப்பிரிவு தலைவர் பர்தலோமியாவிடம் போப் இரண்டாம் ஜோன்பால் ஒப்படைத்தார்.

உலகின் 30 கோடி பழமைவாத கிறிஸ்தவர்களுக்கு இந்த நடவடிக்கை மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக போப் இரண்டாம் ஜோன் பால் கூறுகையில் -

இந்தச் சடலங்களை ஒப்படைத்ததன் மூலம் தமது காயங்களுக்கு மருந்திடப்பட்டிருக்கிறது. சமரசத்தின் பாதைக்கு வழிவகுக்கும் என்றார். அடுத்து பர்த்தலோமியோ கூறுகையில் -

போப் இரண்டாம் ஜோன் பாலின் இந்த நடவடிக்கை கிறிஸ்தவர்களை ஒருமைப்படுத்தும். இதன்மூலம் மத அநீதி துடைக்கப்பட்டிருக்கிறது என்றார்.

# ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை மொசூலில் நடத்துவது சாத்தியமில்லை

## அமெரிக்க இராணுவ அதிகாரி தெரிவிப்பு



ஈராக்கின் மொசூல் நகரத்தில் தற்போது இடம்பெற்றுவரும் வன்செயல் சம்பவங்களை அடுத்து அடுத்தவருடம் ஜனவரி மாதம் ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை மொசூல் நகரின் சகல இடங்களிலும் நடத்துவது சாத்தியமில்லையென அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வடக்கு ஈராக்கிற்குப் பொறுப்பான பிரிகேடியர் ஜெனரல் கத்தார் ஹம் என்பவரே இந்தக் கருத்தை தெரிவித்தார்.

மொசூல் நகரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அமெரிக்க மற்றும் ஈராக் படைகள் கடுமையாக உழைத்து வருவதாகவும், மொசூல் நகரில் தேர்தலை நடத்துவதற்கு உள்ளூர் சக்திகள் முரணாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக அமெரிக்கப் படைகள் மொசூலுக்கு அனுப்பப்படவில்லையெனவும் அங்குள்ள படையினரே வீதிரோந்திலும், வீட்டுக்குவீடு தேடுதலிலும் ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அண்மைய சில நாட்களாக மொசூலில் இடம்பெற்ற தாக்குதல்களில் 57 ஈராக்கிய தேசிய காவற்படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன், பொலிஸ் நிலையம் ஒன்றும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈராக்கின் 17 தேசிய காவற்படையினர் தம்மால் கொல்லப்பட்டதாக அமு முசாப் அல் - ஷர்காவி தலைமையிலான இஸ்லாமிய அமைப்புத் தெரிவித்தது. இவ்வாறு கொல்லப்பட்ட 17 படையினரது சடலங்களும் கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



அவுஸ்ரேலியாவின் கிங் ஐலண்ட பகுதியில் இறந்த நிலையில் கரையொதுங்கியிருக்கும் 80 இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்களையும், டொல்பின்களையும் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# பொலிஸ் நிலையத்தில் மிதிவெடிகள் மாயம்!

(திருகோணமலை)

திருகோணமலை - உப்பு வெளிப் பிரதேசத்தில் இருந்த 6 மிதிவெடிகள் மர்மமான முறையில் காணாமற் போயிருப்பதாகத் தெரிய வருகிறது.

அந்தப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப் பட்டு செயலிழக்கச் செய்வதற் காக 12 மிதிவெடிகள் உப்பு வெளிப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டிருந்ததாகவும் அவற்றில் 6 காணாமற் போயிருப்பதாகவும் - தெரியவருகிறது.

இவற்றில் வெடிபொருட்கள் இருப்பதால் அப்பிரதேச மீனவர்க ளுக்கு இவை திருட்டுத் தனமாக விற்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட் டனர்.

இதேவேளை கடந்த வியாழன், மற்றும் வெள்ளி ஆகிய தினங்க ளில் வவுனியா வேப்பங்குளத் திலும், நெழுக்குளத்திலும் 8 பொலிஸ் காவலரண் கள்பொதுமக் களால் அடித்து நொருக்கி சேத மாக்கப் பட்டு எரியூட்டப்பட்ட தாகவும் தெரிய வருகிறது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அசோக ஜெயவர்த்தன பதவி விலகினார் !

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தனது பதவியை நேற்று ராஜினாமாச் செய்தார்.

எனினும் இவர் தனது பதவி விலகலுக்கான காரணத்தைத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன கடந்த மாவீரர் வாரத்தில் மாகாண சபைகளின் ஆளுநர் கூட்டம் நடத்த முற்பட்ட போது அது வெற்றி பெறாது காலவரையறையின்றி ரத்துச் செய்யப்பட்டதால் கோப மடைந்திருந்தார்.

இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதியால் நியமிக் கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு செயலர் பதவியைப் பொறுப்பேற்பதற்காக இவர் ராஜினாமா செய்துள்ளாரா அல்லது 26, 27, 28 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருந்த ஆளு நர்களின் 6 ஆவது மாநாடு ரத்துசெய்யப்பட்டதற்கு அரசாங்கம் விடுத்த அழுத்தம் காரணமாக இந்த முடிவை எடுத்தாரா என்பது குறித்துத் தெரியவரவில்லை. (04)

## பேராதனை பல்கலையில்

# மாவீரர் தினம் அனுஷ்டித் மாணவர்கள் விசாரணை

(கொழும்பு)

கண்டி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாவீரர் தினம் அனுஷ் டித்த தமிழ் மாணவர்கள் பொலி ஸாரால் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட தாகத் தெரியவருகிறது.

தமிழ் மாணவர்கள் தமது விடு தியில் மாவீரர் தினம் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்துகொண்டி ருந்தவேளை சில மாணவர் களினால் பல்கலைக்கழக பாது காப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட் டது.

இதனை அடுத்து அங்கு வர வழைக்கப்பட்ட பொலிஸார் விடு

தலைப் புலிகள் தொடர்பான
ணங்களை மாணவர்களிடமி
கைப்பற்றினர்.

இதனையடுத்து ஏற்பாட்
களான இரண்டு மாணவ
பொலிஸ் நிலையத்திற்கு அ
துச் செல்லப்பட்டு விசாரணை
பின் விடுவிக்கப்பட்டனர்.

## நீதிபதி சரத் அம்பேபிட்டிய

# கொலைச் சந்தேக நபர்களை சா நீதிமன்றில் அடையாளம் காட்டின

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகி யோரது கொலைகள் தொடர்பாக - கைதுசெய்யப்பட்ட நான்கு சந் தேக நபர்களும் நேற்று சாட்சியி னால் அடையாளம் காட்டப்பட்டனர்.

கொழும்பு பிரதம நீதிமன்றத் தில், நீதிபதி சரோஜினி குசல அப யவர்த்தன முன்னிலையில் நேற்று மாலை அடையாள அணிவகுப்பு நடைபெற்றபோது, வாடகைக் காரின் சாரதியான சாட்சி - துப் பாக்கிப் பிரயோகம் செய்த மாத் ஒதறையைச் சேர்ந்த நிசாந்த உதயகுமார, மாலம்பேயைச் சேர்ந்த சம்பத் துசார விஜயவர்த்தன ஆகி யோருடன் வாகனத்தில் பயணம் செய்த தெல்கொடையைச் சேர்ந்த சுயித் ரோகன மற்றும் கடுவலவைச் சேர்ந்த சுமந்த நிரோசன் ஆகி யோரை அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் நால்வரையம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

ஏனைய சந்தேக நபர்களான ஹல்ஸ் ரொப்பை சேர்ந்த எம். வசந்த குமார என்பவரையும் அன்றைய தினம் வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்ட நீதிபதி, பிரதான சந்தேக நபரான மொஹமட் நவ்பர், (போதைவஸ்து வர்த்தகரும் பிர தான கொலைச் சூத்திரதாரியும்) என்பவரை புலன்விசாரணை முடிந்த பின்பு நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்துமாறு குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு உத் தரவிட்டார்.

சந்தேக நபர்கள் பலத்த பாது

காப்புக்கு மத்தியில் நீதி
திற்கு அழைத்து வரப்பட்ட
மன்ற கட்டடத் தொகுதி
அதனை அண்மித்த பகுதி
பாதுகாப்பு பலப்படுத்த
ருந்தது.

அடையாள அணிவகு
போது, இவர்கள் சார்பில்
வொரு சட்டத்தரணியும் ஆ
வில்லை.

குறிப்பிட்ட சந்கே நபர்க
லங்கா சுதந்திரக் கட்ச
சேர்ந்த மேல்மாகாண சபை
பினர் நாமல் குணவர்த்தன
யுடன் தொடர்புடையவர்
விசாரணையின்போது,
ஒன்று வெளியாகியுள்ளது

# புனர்நிர்மாண பணிகளுக்க 4.6 மில்லியன் டொலர் உத

இலங்கையில் போரினால் பாதிக் கப்பட்ட மக்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக அவுஸ்ரேலிய அர சாங்கம் 4.60 மில்லியன் டொலரை வழங்கவுள்ளதாக அவுஸ்ரேலிய நாடாளுமன்ற செயலர் புறூஸ் பில் சன் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய நாடாளுமன்ற செயலர் புறூஸ் பில்சன் தலை மையிலான குழுவினர் நேற்று யாழப் பாணத்திற்கு வருகைதந்த வேளையே அவர் இதனைத் தெரி வித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையில் மிதிவெடி அகற்

றும் செயற்திட்டத்திற்
மில்லியன் டொலரும்
மூலம் மேற்கொள்ளப்படு
களுக்கு 2.5 மில்லியன்
யு.என்.டி.பி மூலம் மேற்
படும் திட்டத்துக்கு ஒரு ம
டொலரும் வழங்கப்பட

முன்னதாக புறூஸ்
தலைமையிலான குழு
றுக்காலை கொழும்பிலி
னம்மூலம் பலாலி வந்த
அங்கிருந்து வந்த அ
தூர்ப் பகுதியில் மி
அகற்றப்படும் பகுதிகளை
பார்வையிட்டனர். இத
யாழ் செயலகத்துக்கு வ
அவர்கள் அரச அதிபர்
நாதனை சந்தித்து க
யாடினர்.

**நியூஸிலாந்து..**

3 இலட்சம் ரூபா வரை முக் வருக்குச் செலுத்தியிருப்பதாகக் தெரியவருகிறது.

கைதான 18 பேரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட தாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, காலி பத்தேக மவில் இரண்டு தன்னியக்கக் கைத் துப்பாக்கிகளுடன் 67 வயது ஜேர் மன் பிரஜையொருவர் நேற்றுமுன் தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரு வாரங்களுக்கு முன்பு உல்லாசப் பயணியாக வருகை தந்த இவரிடம் இந்தத் துப்பாக் கிகள் எப்படிக் கிடைத்தது என்பது குறித்தும், இவற்றை அவர் எதற் காக வைத்திருந்தார் என்பது குறித் தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட துப்பாக்கிகள் பெல்ஜி யம் மற்றும் இத்தாலி நாட்டுத் தயாரிப்புகள் என்றும் இந்தத் துப்பாக்கிகளுடன் 42 ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் பத்தேகம பொலிஸார் தெரிவித்தனர். (01)

**திருமலை குழப்பநில**

இந்த நிலைமை
நீடிக்குமானால் போ
சியற் கட்சிகள் நன்ல
கள். இதனால் அங்கு
தணிக்க வேண்டியது
என்றும் ஜே.வி.பியின்
யில் தெரிவிக்கப்பட்டுள

**சந்தகிரி..**

அனுப்பிவைத்துள்ளார்.

நேற்று மாலை ஜனா
திரிகாவால் விசேட
பேரில் திருகோணமலை
யம் செய்த வைஸ் அட்மி
சந்தகிரியும், இராணுவத்
லெப் ஜெனரல் சாந்த
கொடவும் பாதுகாப்பு அ
டன் முக்கிய ஆலோச
மேற் கொண்டனர்.

பதற்றத்தினைத்
மற்றும் பாதுகாப்பினை
போன்ற விடயம் குறித்
பாதுகாப்பு அதிகாரிகளு
தாலோசனை நடத்தின

# திருகோணமலையில் பதற்றமும்...

பாடசாலைகள் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு இருந்தன. வங்கிகள், அரச அலு வலகங்கள் இயங்கவில்லை.

நேற்றுக் காலை திருகோண மலை - கண்டி வீதியூடான போக்கு வரத்து, தம்பலகாமம் சந்தியில் தமிழ் இளைஞர்களால் தடைசெய் யப்பட்டது. இவ்வேளையில் காலை 8.40 மணியளவில் திருகோண மலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடற்படை வாகன தொடரணிக்காக பாதை திறந்து விடப்பட்டது. இதன்போது கண்டி நோக்கிச் சென்ற தனியார் வாகனம் ஒன்று தாக்குதலுக்குள்ளானது. இதில் பயணம் செய்வதற்காக ஏற முனைந்த தமிழ் இளைஞர் ஒருவர் அந்த பஸ் வண்டியின் நடத்துன ரால் தள்ளி விடப்பட்டதன் காரண மாக பஸ் வண்டியில் சிக்குண்டு. கால்கள் முறிந்த நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். தியாகராசா பிரகாஷ் என்ப வரே இவ்வாறு விபத்துக்குள்ளா னார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இளைஞர்கள் பொலிஸாரிடம் முறை யிட்டதன் காரணத்தால், தொடர்ந்து பயணம்செய்த பஸ்வண்டியின் நடத் துனரையும், சாரதியையும் கந்த ளாய் பொலிஸார் விசாரணைக் காகத் தடுத்து வைத்துள்ளனர்.

காலை 10.05 மணியளவில் திரு கோணமலை கொழும்பு பிரயாணத் தில் ஈடுபடுவதற்காக சீனன்குடா விலிருந்து திருகோணமலை நகர் நோக்கி வந்த 62-6291 என்ற பஸ் வண்டிமீது பாதிஸ்புர (ஆண்டான் குளத்திற்குச் சமீபம்) என்ற இடத் தில் கைக்குண்டுத் தாக்குதல் நடத் தப்பட்டது. இதில் கட்டுப்பாட்டை இழந்த பஸ் மின்கம்பத்துடன் மோதிப் புரண்டது.

இதில் பயணம்செய்த மூவர் காயங்களுக்குள்ளாகியதுடன், வாகனச் சாரதி மரணமானார். அவரின் வலது கை சிதைந்து காணப்பட்டது. மிகுந்தபுரம் பகு தியைச் சேர்ந்த சுரங்க சம்பத்த (வயது 24) என்பவரே மரணமான வராவார். உபாலி சந்தன (வயது 22), சமிந்த சந்திரகுமார (வயது 27), சுமித் (வயது 24) ஆகியோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவத்தைக் கேள்வி யுற்ற நகரிலுள்ள சிங்கள காடை யர் குழுவினர் - 10.30 மணியள வில் திருகோணமலை ஆலடி விநா யகர், பத்திரகாளி அம்பாள் ஆல யம், ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல் லூரி என்பவற்றுக்கு அருகாமை யில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் தின பதாதையைத் தகர்க்க முற் பட்டனர். இதனால் சிங்களவர்க ளுக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் இடையே மோதல் உருவானபோது ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஆலடி விநாயகர் ஆலயத்தில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அங்குசென்ற பொலிஸார் ஆலயத்தை உடனடியாக மூடுமாறு பணித்தனர். அத்துடன், நகரில் நிலைமைகள் மேலும் மோசமடை வதைத் தடுக்கும் முகமாக காலை 11.00 மணி தொடக்கம் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

காலை 11.20 மணியளவில் திருகோணமலைக்கும், மட்டக் களப்புக்கும் இடையே சேவையில் ஈடுபடும், முருகையா சுரேஷ்குமார் என்பவருக்குச் சொந்தமான பஸ் வண்டியை, திருத்தும் இடத்தில் இருந்து அதன் சாரதியான பண்டார என்பவர் எடுத்து வரும்போது அத னைச் சூழ்ந்துகொண்ட சிங்களவர் கள் 5 ஆம் கட்டைப் பகுதிக் காட் டுக்கு எடுத்துச் சென்று தீயிட்டு முற்றாக எரித்தனர்.

நண்பகல் 12.15 மணியளவில் திருகோணமலை புல்மோட்டை வீதியில் உப்புவெளி பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் திருகோணமலை கிளை யின் முன்னாள் தலைவரான ஈழத்து நாதன் என்பவரது வீடும் தாக்கு தலுக்குள்ளானது. அவர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின ரின் பாதுகாப்புடன் நகரில் உள்ள அவரது உறவினர் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார். வீடு பலத்த சேதத்திற்கு உள்ளானது.

இதேவேளையில் லவ்லேன் பகுதியூடாகச் சென்ற கடற்கரைச் சேனை மூதூரைச் சேர்ந்த அரு மைத்துரை ரவிச்சந்திரன் என்பவர் சுகாதார அலுவலகத்தின் மருந்துப் பொருள் களஞ்சியசாலைக்கு முன் னால் வைத்து சிங்கள இளைஞர் களால் கடுமையாகத் தாக்கப்பட் டார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

நண்பகல் 12.20 மணியளவில் அலஸ்தோட்டம் உல்லாச விடுதி ஒன்றில் இருந்து எரிபொருள் நிரப் புவதற்காகச் சென்ற வான் ஒன்று எரியூட்டப்பட்டது. இந்த வானில் சென்ற அதன் உரிமையாளருக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியவரவில்லை. ஜேர்மனியில் இருந்து வந்த உல்லாசப் பயணி களை அழைத்துவந்த வானே தீக கிரையாக்கப்பட்டது.

நேற்று மாலை - அபயபுரம் எல்லையில் வசித்து வந்த 20 தமிழ் குடும்பங்கள், பாதுகாப்புக் கருதி அன்புவழிபுரம் கலைமகள் வித்தி யாலயத்துக்கு இடம்பெயர்ந்தனர். இங்கு வந்த இராணுவத்தினர் வீதி யில் நின்ற 15 இற்கும் மேற்பட்ட இளைஞர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்று விடுவித்தனர்.

பின்னர் கலைமகள் பாடசா லைக்கு வந்த இராணுவத்தினர் இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் சொந்த இடத்துக்குத் திரும்பிச் செல்லுமாறும், உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும் கூறி அழைத்துச் சென்றனர். அன்புவழிபுரம் அபய புரம் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட காரணத்தா லேயே அவர்கள் இடம்பெயர்ந் திருந்தனர்.

இரவு 7.45 மணியளவில் உப்பு வெளி சிறிமாபுரம் பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் வெடித்தன. எனி னும், எவ்வித சேதங்களும் ஏற்பட வில்லை. இதனை வெடிக்க வைத்த வர்கள் யார் என்பது இன்னமும் தெரியவில்லை. மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்காக இவை வெடிக்க வைக்கப்பட்டிருக் கலாம்.

திருகோணமலை நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட் டுள்ளது. பெருமளவு இராணு வத்தினரும் பாதுகாப்பு கடமைக ளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (04, 10)

## கண்ணீர் காணிக்கை

அச்சு இயந்திரத் திருத்துநர் முத்துக்கிருஷ்ண
அற்புததேவன் (மாயவன்) அவர்களின் அன்புத்
முத்துக் கிருஷ்ணர் நேச பூப
அவர்கள் காலமான செய்திகேட்டு வேத
அடைவதுடன் அவரது பிரிவால் துயரும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள
தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது ஈழநாடு
பணிப்பாளர், பணியாள

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளி